க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை

# மதிப்பீட்டு அறிக்கை

# 2022

## 22

## தமிழ்மொழியும் இலக்கியமும்

ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2022(2023)

# மதிப்பீட்டு அறிக்கை

# 22 – தமிழ்மொழியும் இலக்கியமும்

ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்

முழுப் பதிப்புரிமையுடையது

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சை 2022 (2023)

மதிப்பீட்டு அறிக்கை - தமிழ்மொழியும் இலக்கியமும்

| | | |
|---|---|---|
| வழிகாட்டல் | : | ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும் | : | டபிள்யு.எஸ்.டீ. வீரசிங்ஹ<br>பரீட்சை ஆணையாளர்<br>ஆய்வு மற்றும் அபிவிருத்தி |
| உள்ளடக்க உருவாக்கத்திற்கான வழிகாட்டல் | : | கே. விக்னரூபன்<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர் |
| பாட உள்ளடக்க அபிவிருத்திக் குழு | : | யூ.எல். உவைஸ்<br>பிரதி ஆணையாளர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம்<br><br>எஸ். சுந்தரலிங்கம்<br>பிரதிக் கல்விப் பணிப்பாளர்<br>கல்வி அமைச்சு<br><br>ஏ.ஐ. ரதி (ஆசிரிய ஆலோசகர்)<br>வலயக் கல்வி அலுவலகம், கண்டி<br><br>எஸ். ஜனார்த்தனன் (ஆசிரிய ஆலோசகர்)<br>வலயக் கல்வி அலுவலகம், நுவரெலியா<br><br>பீ. மகாலிங்கசிவம் (ஆசிரிய ஆலோசகர்)<br>வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்<br><br>என். சசிகுமார் (ஆசிரியர்)<br>யா/இணுவில் மத்திய கல்லூரி, இணுவில் |
| கணினி பக்க வடிவமைப்பு | : | ம. நிரோஷினி<br>முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் |
| முகப்பு அட்டை வடிவமைப்பு | : | ஏ.எல்.கே. சதுராணி<br>முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் |

## பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் செய்தி

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சை 2022 இன் தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்திற்குரிய இந்த மதிப்பீட்டு அறிக்கையானது, பரீட்சார்த்திகளின் அடைவுமட்டங்கள் பற்றிய தரவுகளையும், விடைத்தாள்களை மதிப்பீடு செய்ததன் மூலம் பெறப்பட்ட அவதானிப்புகள் தொடர்பான தகவல்களையும் உள்ளடக்கியுள்ளது. மாணவர்களின் அறிவை மேம்படுத்துவதற்கும், கற்றல் - கற்பித்தல் செயல்முறையை மேலும் வலுப்படுத்துவதற்கும், பாடசாலைக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான பரிந்துரைகளை முன்வைப்பதையும் நோக்கமாகக் கொண்டு இது தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் பாடத்திட்டம், வினாத்தாள் வடிவமைப்பு மற்றும் கற்றல் தேர்ச்சிகளுக்கு ஏற்ப பரீட்சார்த்திகளின் அடைவுமட்டங்கள் என்பன விரிவாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய, ஒவ்வொரு வினா தொடர்பிலும் பரீட்சார்த்திகளின் பதில்கள், அவர்களின் பலங்கள் மற்றும் பலவீனங்கள் அடையாளம் காணப்பட்டு, அவற்றை மேம்படுத்துவதற்கு கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் இதில் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வறிக்கையானது ஆசிரியர்கள், பாடசாலை நிர்வாகிகள், பாடப்பணிப்பாளர்கள, கலைத்திட்ட அபிவிருத்தியாளர்கள், கல்விக்கொள்கை வகுப்பாளர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் உட்பட கல்வித் துறையுடன் தொடர்புடைய அனைவருக்கும் மிகவும் பயனுள்ள ஒரு ஆவண-மாகும். கற்றல்-கற்பித்தல் செயல்முறையின் பலவீனங்களைச் சரியாக அடையாளம் கண்டு, கற்பித்தல் இலக்குகளைச் சென்றடைவதற்கு இது பெரிதும் உதவுகிறது. மேலும், கலைத்திட்டத் திருத்தம், ஆசிரியர் தொழில்முறை அபிவிருத்தி, வளங்களை ஒதுக்குதல் போன்ற கல்விசார் தீர்மானங்களை எடுப்பதற்கு இவ்வறிக்கை பெரிதும் பயன்படும்.

இவ்வறிக்கையிலிருந்து அதிகபட்ச நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கு, பரீட்சார்த்திகளின் அடைவுமட்டம் தொடர்பான பகுப்பாய்வுகள், அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றை கவனமாக ஆராய்வது அவசியமாகும். இதன் மூலம் மாணவர்கள் எதிர்கொள்ளும் கருத்துசார்ந்த பலவீனங்களைச் சரியாக அடையாளம் கண்டு, அவற்றை நிவர்த்தி செய்வதற்கான சரியான திட்டங்களை உருவாக்க முடியும். மேலும், இந்த அறிக்கை பரீட்சார்த்திகளின் அடைவுமட்டங்களை உயர்த்துவதற்குப் பொருத்தமான வழிகாட்டலையும் வழங்குகிறது.

கல்வியின் தரத்தை உயர்த்துவதில் தரவு அடிப்படையிலான தீர்மானங்கள் இன்றியமையாதது என்பதால், இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ள கண்டறிதல்கள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றை கல்விக்கொள்கை வகுப்பாளர்கள, கல்வி நிர்வாகிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் போன்ற அனைத்துப் பங்குதாரர்களினாலும் நடைமுறைப் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, கற்றல் - கற்பித்தல் செயல்முறையை மேலும் வலுப்படுத்தப் பயன்படும் என நம்புகிறேன்.

இறுதியாக, இந்த மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிப்பதற்கு அர்ப்பணிப்புடன் பங்களித்த அனைத்து வளவாளர்களுக்கும், பரீட்சைத் திணைக்களத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கிளை அதிகாரிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்த அறிக்கையைத் தயாரிப்பதில் தீவிரமாகப் பங்களித்த அனைவரதும் சேவையையும் நான் மிகவும் உயர்வாகக் கருதுகிறேன்.

**ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**
**2024 ஆகஸ்ட் 20**

# பகுப்பாய்வின் சாராம்சம்

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சை – 2022 இற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் பரீட்சார்த்திகள், ஆசிரியர்கள், பாடப்பணிப்பாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் கல்வி ஆராய்ச்சியாளர்கள் ஆகிய அனைவருக்கும் ஒரே அளவில் பயனுள்ளதாக அமையும்.

இந்த மதிப்பீட்டு அறிக்கையின் உள்ளடக்கம் நான்கு பிரதான பகுதிகளின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது. க.பொ.த (சாதாரண தர) பரீட்சையின் ‘தமிழ் மொழியும் இலக்கியமும்’ பாடக் கற்றலின் நோக்கங்கள் மற்றும் பாட அடைவுகள் குறித்த தகவல்கள் இவ்வறிக்கையின் முதலாம் பகுதியின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த மதிப்பீட்டு அறிக்கையின் இரண்டாம் பகுதியின் கீழ் பகுதி I இற்கான பகுப்பாய்வும், மூன்றாம் பகுதியின் கீழ் பகுதி II இற்கான பகுப்பாய்வும், நான்காம் பகுதியின் கீழ் பகுதி III இற்கான பகுப்பாய்வும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

முதலாம் பகுதியின் கீழ் மொழிமூலம் மற்றும் பாலின அடிப்படையில் இப்பாடத்திற்காகத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை, மாவட்டங்கள் மற்றும் கல்வி வலயங்களின் அடிப்படையில் பரீடசார்த்திகள் தரங்களைப் பெற்றுக்கொண்ட விதம் போன்ற தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் பகுதியின் கீழ்ப் பகுதி I தொடர்பான வினாக்கள் மற்றும் விடைகள் குறித்த பகுப்பாய்வு உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில் பகுதி I இன் கட்டமைப்பு, பகுதி I வினாத்தாள், பகுதி I இற்கான புள்ளி வழங்கும் திட்டம் போன்ற தகவல்களுடன் தரவுகளின் அடிப்படையிலான பகுதி I பகுப்பாய்வும் முன்வைக்கப்பட்டுள்ளது.

மூன்று மற்றும் நான்காம் பகுதிகளில் முன்வைக்கப்பட்டுள்ள பகுதி II மற்றும் பகுதி III ஆகியவற்றுடன் தொடர்புடைய வினாக்கள் மற்றும் வழங்கப்பட்ட விடைகள் குறித்த பகுப்பாய்வின் கீழ் பகுதி II மற்றும் பகுதி III இன் கட்டமைப்பு, பகுதி II மற்றும் பகுதி III உடன் தொடர்புடைய ஒவ்வொரு வினாவும் புள்ளி வழங்கும் திட்டமும் முன்வைக்கப்பட்டுள்ளன. இங்கு ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்தமை குறித்த பகுப்பாய்வும், ஒவ்வொரு வினாவினதும் பகுதிகளினதும் உப பகுதிகளினதும் இலகுதன்மையும் தனித்தனியாக வினாவுடன் தொடர்புடைய தேர்ச்சிகள் மற்றும் அந்தத் தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காக கற்றல் - கற்பித்தல் செயல்முறையை ஒழுங்கமைக்க வேண்டிய விதம், அதாவது இப்பகுப்பாய்வுகளின் அடிப்படையிலான அபிவிருத்திப் பரிந்துரைகளும் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன.

மரபுசார் சோதனைக்கோட்பாடு (Classical Test Theory) மற்றும் உருப்படி துலங்கல் கோட்பாடு (Item Response Theory) ஆகியவற்றைப் பயன்படுத்தி பரீட்சார்த்திகளின் துலங்கல்களைப் பகுப்பாய்வு செய்ததன் மூலம் பெற்றுக்கொண்ட தகவல்கள், விடைத்தாள் மதிப்பீட்டில் ஈடுபட்ட பிரதான பரீட்சகர்கள் மற்றும் உதவிப் பரீட்சகர்கள் மற்றும் கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் என்பன இந்த மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளன.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கிளை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை, பத்தரமுல்ல

## உள்ளடக்கம் பக்க இல.

### பகுதி I


1. பாடக் குறிக்கோள்கள் மற்றும் பாட அடைவு தொடர்பான தகவல்கள்
   - 1.1 பாடக் குறிக்கோள்கள் 1
   - 1.2 பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்
     - 1.2.1 தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்திற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2
     - 1.2.2 பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள விதம் 2
     - 1.2.3 பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள விதம் : மாவட்ட அடிப்படையில் 3
     - 1.2.4 பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் : கல்வி வலய அடிப்படையில் 5
     - 1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்றுள்ள விதம் 9


### பகுதி II


2. வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்
   வினாப்பத்திரம் - I
   - 2.1 தமிழ் மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் I இன் கட்டமைப்பு 10
   - 2.2 தமிழ் மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் I 11
   - 2.3 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் I இற்கான புள்ளி வழங்கும் திட்டம் 15
   - 2.4 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் I இல் பல்தேர்வு வினாக்களுக்கு விடைகளைத் தெரிவுசெய்துள்ள விதம் 16
   - 2.5 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் I இன் வினாக்களின் இலகுதன்மைச்சுட்டிகள் 17
   - 2.6 பாடப்பரப்பு அடிப்படையில் வினாப்பத்திரம் I இன் வினாக்களின் இலகுதன்மைச்சுட்டிகள் 18
   - 2.7 வினாப்பத்திரம் I இற்கான பகுப்பாய்வு 19


### பகுதி III


3. வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும் - வினாப்பத்திரம் - II
   - 3.1 தமிழ் மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு 22
   - 3.2 வினாப்பத்திரம் II இற்கான பகுப்பாய்வு 23

**உள்ளடக்கம்** **பக்க இல.**


**3.3** தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் II இற்கான வினாக்கள் தொடர்பான விசேட அவதானிப்புகளும் ஆலோசனைகளும்

**3.3.1** வினா இலக்கம் 1 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் 26

**3.3.2** வினா இலக்கம் 1 இற்கான பகுப்பாய்வு 28

**3.3.3** வினா இலக்கம் 2 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் 30

**3.3.4** வினா இலக்கம் 2 இற்கான பகுப்பாய்வு 33

**3.3.5** வினா இலக்கம் 3 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் 35

**3.3.6** வினா இலக்கம் 3 இற்கான பகுப்பாய்வு 36

**3.3.7** வினா இலக்கம் 4 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் 38

**3.3.8** வினா இலக்கம் 4 இற்கான பகுப்பாய்வு 39

**3.3.9** வினா இலக்கம் 5 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் 41

**3.3.10** வினா இலக்கம் 5 இற்கான பகுப்பாய்வு 43

**பகுதி IV**

**4.** வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்

வினாப்பத்திரம் - III

**4.1** தமிழ் மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் III இன் கட்டமைப்பு 45

**4.2** வினாப்பத்திரம் III இற்கான பகுப்பாய்வு 46

**4.3** தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் III இற்கான வினாக்கள் தொடர்பான விசேட அவதானிப்புகளும் ஆலோசனைகளும்

**4.3.1** வினா இலக்கம் 1 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் 49

**4.3.2** வினா இலக்கம் 1 இற்கான பகுப்பாய்வு 51

**4.3.3** வினா இலக்கம் 2 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் 53

**4.3.4** வினா இலக்கம் 2 இற்கான பகுப்பாய்வு 55

**4.3.5** வினா இலக்கம் 3 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் 57

**4.3.6** வினா இலக்கம் 3 இற்கான பகுப்பாய்வு 59

**4.3.7** வினா இலக்கம் 4 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் 61

**4.3.8** வினா இலக்கம் 4 இற்கான பகுப்பாய்வு 64

**4.3.9** வினா இலக்கம் 5 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் 66

**4.3.10** வினா இலக்கம் 5 இற்கான பகுப்பாய்வு 67

**4.3.11** வினா இலக்கம் 6 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் 69

**4.3.12** வினா இலக்கம் 6 இற்கான பகுப்பாய்வு 70

**4.3.13** வினா இலக்கம் 7 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் 72

**4.3.14** வினா இலக்கம் 7 இற்கான பகுப்பாய்வு 73

## அட்டவணைகளின் பட்டியல் பக்க இல.


| | | | |
|---|---|---|---|
| **அட்டவணை 1.1** | - | பால் அடிப்படையிலான பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பரம்பல் | 2 |
| **அட்டவணை 1.2** | - | பால் மற்றும் தரங்கள் அடிப்படையில் பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பரம்பல் | 2 |
| **அட்டவணை 1.3** | - | மாவட்ட அடிப்படையில் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொண்ட தரங்களின் பரம்பல் | 3 |
| **அட்டவணை 1.4** | - | கல்வி வலய அடிப்படையில் பரீட்சார்த்திகள் பெற்றுக் கொண்ட தரங்களின் பரம்பல் | **5** |
| **அட்டவணை 1.5** | - | வகுப்பாயிடை அடிப்படையில் பரீட்சார்த்திகள் புள்ளிகள் பெற்றுள்ள விதம் | 10 |
| **அட்டவணை 2.1** | - | புள்ளி வழங்கும் திட்டம் | 15 |
| **அட்டவணை 2.2** | - | ஒவ்வொரு வினாவிற்கும் பரீட்சார்த்திகளால் தெரிவு செய்யப்பட்டுள்ள விடைகளின் சதவீதம் | 16 |

## வரைபுகளின் பட்டியல் பக்க இல.


| | | | |
|---|---|---|---|
| **வரைபு 2.1** | - | வினாப்பத்திரம் I இன் வினாக்களுக்கான இலகுதன்மைச்சுட்டிகள் | 17 |
| **வரைபு 2.2** | - | பாடப்பரப்பு அடிப்படையில் வினாப்பத்திரம் I இன் வினாக்களின் இலகுதன்மைச்சுட்டிகள் | 18 |
| **வரைபு 3.1** | - | வினாப்பத்திரம் II இன் வினாக்களைத் தெரிவுசெய்துள்ள விதமும் அவற்றின் இலகுதன்மையும் | 23 |
| **வரைபு 3.2** | - | வகுப்பாயிடைக்கு ஏற்ப ஒவ்வொரு வினாவுக்குமான பரீட்சார்த்திகளின் அடைவு | 24 |
| **வரைபு 3.3** | - | வினாப்பத்திரம் II இன் வினாக்களுக்கான .இலகுதன்மைச்சுட்டிகள் | 25 |
| **வரைபு 3.4** | - | வினா இல. 1 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் | 28 |
| **வரைபு 3.5** | - | 1 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிகள் | 28 |
| **வரைபு 3.6** | - | வினா இல. 2 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் | 33 |
| **வரைபு 3.7** | - | 2 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிகள் | 33 |
| **வரைபு 3.8** | - | வினா இல. 3 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் | 36 |
| **வரைபு 3.9** | - | 3 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிகள் | 36 |
| **வரைபு 3.10** | - | வினா இல. 4 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் | 39 |
| **வரைபு 3.11** | - | 4 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிகள் | 39 |
| **வரைபு 3.12** | - | வினா இல. 5 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் | 43 |
| **வரைபு 3.13** | - | 5 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிகள் | 43 |
| **வரைபு 4.1** | - | வினாப்பத்திரம் II இன் வினாக்களைத் தெரிவுசெய்துள்ள விதமும் அவற்றின் இலகுதன்மையும் | 46 |
| **வரைபு 4.2** | - | வகுப்பாயிடைக்கு ஏற்ப ஒவ்வொரு வினாவுக்குமான பரீட்சார்த்திகளின் அடைவு | 47 |
| **வரைபு 4.3** | - | வினாப்பத்திரம் II இன் வினாக்களுக்கான .இலகுதன்மைச்சுட்டிகள் | 48 |
| **வரைபு 4.4** | - | வினா இல. 1 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் | 51 |
| **வரைபு 4.5** | - | 1 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிகள் | 51 |

**வரைபு 4.6** - வினா இல. 2 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் 55

**வரைபு 4.7** - 2 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிகள் 55

**வரைபு 4.8** - வினா இல. 3 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் 59

**வரைபு 4.9** - 3 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிகள் 59

**வரைபு 4.10** - வினா இல. 4 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் 64

**வரைபு 4.11** - 4 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிகள் 64

**வரைபு 4.12** - வினா இல. 5 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் 67

**வரைபு 4.13** - 5 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிகள் 67

**வரைபு 4.14** - வினா இல. 6 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் 70

**வரைபு 4.15** - 6 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிகள் 70

**வரைபு 4.16** - வினா இல. 7 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் 73

**வரைபு 4.17** - 7 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிகள் 73

# பகுதி - I

## 1.0 பாடக் குறிக்கோள்கள் மற்றும் பாட அடைவு தொடர்பான தகவல்

### 1.1 பாடக் குறிக்கோள்கள்

- கேட்டல், பேசுதல், வாசித்தல் மற்றும் எழுதுதல் ஆகிய நான்கு மொழித்திறன்களையும் விருத்தி செய்தல்.
- தெளிவான எழுத்தாக்கங்களை வழங்கத் தேவையான மொழித்திறன்களை வளர்த்துக் கொள்ளுதல்.
- தமிழ் மொழியைத் தொடர்பாடற் கருவியாகக் காலத்திற்குப் பொருத்தமான முறையில் வினைத்திறனுடன் கையாளுதல்.
- இலக்கியங்களினூடாகச் சமூக, கலாசார விழுமியங்களை அறிந்து அவற்றைப் பேணும் மனப்பாங்கை வெளிப்படுத்துதல்.
- கலைகள், விஞ்ஞானம், தொழினுட்பம் என்பவற்றின் வளர்ச்சிக்கு ஏற்ப மொழியைச் செம்மையாகப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெற்றுக்கொள்ளுவதனூடாக வாழ்க்கைக்குத் தேவையான படிப்பினைகளைப் பெற்றுக்கொள்ளுதல்.
- மொழியினூடாக மாணவர் தமது ஆளுமையை வளர்த்துக் கொள்ளுதல்.
- தேசிய ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்க மொழியை ஒரு கருவியாகக் கொள்ளுதல்.

**மூலம்** : தரம் 11 தமிழ்ப்பாட ஆசிரியர் வழிகாட்டி (2016), இ.தே.க நிறுவகம்

### 1.2 பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்

#### 1.2.1 தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்திற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

**அட்டவணை 1.1**

பால் அடிப்படையிலான பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பரம்பல்

| பாடம் | பாடசாலைப் பரீட்சார்த்திகள் | | | | | தனிப்பட்ட பரீட்சார்த்திகள் | | | | | மொத்தப் பரீட்சார்த்திகள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | ஆண் | | பெண் | | மொத்தம் | ஆண் | | பெண் | | மொத்தம் | ஆண் | | பெண் | |
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| தமிழ் | 74,047 | 35,177 | 47.51 | 38,870 | 52.49 | 8,996 | 5,507 | 61.22 | 3,489 | 38.78 | 83,043 | 40,684 | 48.99 | 42,359 | 51.01 |

**மூலம்:** ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

இந்த அட்டவணையின்படி ஆண் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையை விட பெண் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. தனிப்பட்ட பரீட்சார்த்திகளில் பெண் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையை விட ஆண் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

#### 1.2.2 பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள விதம்

**அட்டவணை 1.2**

பால் மற்றும் தரங்கள் அடிப்படையில் பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பரம்பல்.

| தரம் | பாடசாலைப் பரீட்சார்த்திகள் | | | | | தனிப்பட்ட பரீட்சார்த்திகள் | | | | | மொத்தப் பரீட்சார்த்திகள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | ஆண் | | பெண் | | மொத்தம் | ஆண் | | பெண் | | மொத்தம் | ஆண் | | பெண் | |
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| **A** | 13,830 | 4,021 | 11.43 | 9,809 | 25.24 | 217 | 59 | 1.07 | 158 | 4.53 | 14,047 | 4,080 | 10.03 | 9,967 | 23.53 |
| **B** | 13,697 | 5,055 | 14.37 | 8,642 | 22.23 | 465 | 177 | 3.21 | 288 | 8.25 | 14,162 | 5,232 | 12.86 | 8,930 | 21.08 |
| **C** | 21,902 | 10,085 | 28.67 | 11,817 | 30.40 | 1,901 | 908 | 16.49 | 993 | 28.46 | 23,803 | 10,993 | 27.02 | 12,810 | 30.24 |
| **S** | 15,641 | 9,235 | 26.25 | 6,406 | 16.48 | 3,107 | 1,819 | 33.03 | 1,288 | 36.92 | 18,748 | 11,054 | 27.17 | 7,694 | 18.16 |
| **W** | 8,977 | 6,781 | 19.28 | 2,196 | 5.65 | 3,306 | 2,544 | 46.20 | 762 | 21.84 | 12,283 | 9,325 | 22.92 | 2,958 | 6.98 |
| மொத்தம் | **74,047** | **35,177** | **100.00** | **38,870** | **100.00** | **8,996** | **5,507** | **100.00** | **3,489** | **100.00** | **83,043** | **40,684** | **100.00** | **42,359** | **100.00** |

**மூலம்** : ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

பொதுவாகப் பெண் பரீட்சார்த்திகளில் 74.85% ஆனோர் திறமைச் சித்திக்குமேல் சித்தி அடைந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. மிகவும் குறைந்தளவிலான பெண் பரீட்சார்த்திகளே இப்பாடத்தில் சித்தியடையத் தவறியுள்ளமையை இந்த அட்டவணைமூலம் அறியமுடிகிறது. ஆண் பரீட்சார்த்திகளின் அடைவுமட்டம் மிகவும் குறைந்தளவாகவே காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. ஆண் மாணவர்களின் அக்கறையின்மையும் கவனயீனமுமே இப்பாடத்தில் இந்தப் பரீட்சார்த்திகளின் அடைவுமட்டம் குறைவடையக் காரணமாக இருக்க முடியும்.

## 1.2.3 முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள விதம் : மாவட்ட அடிப்படையில்

**அட்டவணை 1.3**

மாவட்ட அடிப்படையில் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொண்ட தரங்களின் பரம்பல்

| மாவட்டம் | தமிழ் மொழியும் இலக்கியமும் | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தோற்றியவர்களது எண்ணிக்கை | A | | B | | C | | S | | A+B+C+S | | W | | |
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | |
| கொழும்பு | 3,266 | 693 | 21.22 | 596 | 18.25 | 879 | 26.91 | 624 | 19.11 | 2,792 | 85.49 | 474 | 14.51 | |
| கம்பஹா | 1,314 | 198 | 15.07 | 267 | 20.32 | 371 | 28.23 | 303 | 23.06 | 1,139 | 86.68 | 175 | 13.32 | |
| களுத்துறை | 2,171 | 277 | 12.76 | 308 | 14.19 | 549 | 25.29 | 502 | 23.12 | 1,636 | 75.36 | 535 | 24.64 | |
| கண்டி | 4,709 | 693 | 14.72 | 802 | 17.03 | 1,400 | 29.73 | 1,099 | 23.34 | 3,994 | 84.82 | 715 | 15.18 | |
| மாத்தளை | 1,482 | 194 | 13.09 | 221 | 14.91 | 414 | 27.94 | 371 | 25.03 | 1,200 | 80.97 | 282 | 19.03 | |
| நுவரெலியா | 6,386 | 1,049 | 16.43 | 1,338 | 20.95 | 2,320 | 36.33 | 1,283 | 20.09 | 5,990 | 93.80 | 396 | 6.20 | |
| காலி | 371 | 55 | 14.82 | 57 | 15.36 | 103 | 27.76 | 80 | 21.56 | 295 | 79.51 | 76 | 20.49 | |
| மாத்தறை | 507 | 73 | 14.40 | 93 | 18.34 | 156 | 30.77 | 116 | 22.88 | 438 | 86.39 | 69 | 13.61 | |
| ஹம்பாந்தோட்டை | 198 | 30 | 15.15 | 27 | 13.64 | 45 | 22.73 | 46 | 23.23 | 148 | 74.75 | 50 | 25.25 | |
| யாழ்ப்பாணம் | 8,498 | 2,296 | 27.02 | 1,758 | 20.69 | 2,243 | 26.39 | 1,412 | 16.62 | 7,709 | 90.72 | 789 | 9.28 | |
| மன்னார் | 1,617 | 310 | 19.17 | 338 | 20.90 | 573 | 35.44 | 319 | 19.73 | 1,540 | 95.24 | 77 | 4.76 | |
| வவுனியா | 2,295 | 482 | 21.00 | 421 | 18.34 | 683 | 29.76 | 479 | 20.87 | 2,065 | 89.98 | 230 | 10.02 | |
| முல்லைத்தீவு | 1,787 | 391 | 21.88 | 441 | 24.68 | 560 | 31.34 | 273 | 15.28 | 1,665 | 93.17 | 122 | 6.83 | |
| கிளிநொச்சி | 2,201 | 458 | 20.81 | 484 | 21.99 | 685 | 31.12 | 380 | 17.26 | 2,007 | 91.19 | 194 | 8.81 | |
| மட்டக்களப்பு | 8,515 | 1,823 | 21.41 | 1,603 | 18.83 | 2,428 | 28.51 | 1,693 | 19.88 | 7,547 | 88.63 | 968 | 11.37 | |
| அம்பாறை | 7,176 | 1,717 | 23.93 | 1,498 | 20.88 | 2,051 | 28.58 | 1,306 | 18.20 | 6,572 | 91.58 | 604 | 8.42 | |
| திருகோணமலை | 4,867 | 869 | 17.85 | 896 | 18.41 | 1,354 | 27.82 | 989 | 20.32 | 4,108 | 84.41 | 759 | 15.59 | |
| குருநாகல் | 2,298 | 406 | 17.67 | 441 | 19.19 | 654 | 28.46 | 462 | 20.10 | 1,963 | 85.42 | 335 | 14.58 | |
| புத்தளம் | 2,602 | 336 | 12.91 | 424 | 16.30 | 774 | 29.75 | 642 | 24.67 | 2,176 | 83.63 | 426 | 16.37 | |
| அநுராதபுரம் | 1,300 | 214 | 16.46 | 208 | 16.00 | 375 | 28.85 | 274 | 21.08 | 1,071 | 82.38 | 229 | 17.62 | |
| பொலன்னறுவை | 563 | 92 | 16.34 | 80 | 14.21 | 161 | 28.60 | 135 | 23.98 | 468 | 83.13 | 95 | 16.87 | |
| பதுளை | 3,128 | 456 | 14.58 | 606 | 19.37 | 1,126 | 36.00 | 643 | 20.56 | 2,831 | 90.51 | 297 | 9.49 | |
| மொனராகலை | 298 | 28 | 9.40 | 42 | 14.09 | 102 | 34.23 | 80 | 26.85 | 252 | 84.56 | 46 | 15.44 | |
| இரத்தினபுரி | 1,518 | 256 | 16.86 | 273 | 17.98 | 503 | 33.14 | 327 | 21.54 | 1,359 | 89.53 | 159 | 10.47 | |
| கேகாலை | 1,999 | 421 | 21.06 | 395 | 19.76 | 596 | 29.81 | 354 | 17.71 | 1,766 | 88.34 | 233 | 11.66 | |
| **மொத்தம்** | **71,066** | **13,817** | **19.44** | **13,617** | **19.16** | **21,105** | **29.70** | **14,192** | **19.97** | **62,731** | **88.27** | **8,335** | **11.73** | |

**மூலம்** : ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

மன்னார், நுவரெலியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, அம்பாறை, யாழ்ப்பாணம், பதுளை ஆகிய மாவட்டங்கள் 90% க்கும் மேலான சித்திவீதத்தைக் காண்பிக்கின்றன. யாழ்ப்பாணம், அம்பாறை, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் அதிகளவான பரீட்சார்த்திகள் அதிவிசேட சித்தியைப் (A) பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

அம்பாந்தோட்டை, களுத்துறை, காலி ஆகிய மாவட்டங்களில் சித்தியடையாதோர் சதவீதம் அதிகரித்திருப்பதனை அட்டவணை காண்பிக்கின்றது. அம்பாந்தோட்டை, மொனராகலை, காலி ஆகிய மாவட்டங்களில் மிகவும் குறைந்தளவிலான பரீட்சார்த்திகளே பரீட்சைக்குத் தோற்றியுள்ளபோதிலும் அவர்களின் சித்திவீதமும் மிகவும் குறைவாகவே காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

குறித்த மாவட்டங்களில் உள்ள மாணவர்களுக்கு உரிய முறையில் பரீட்சை வழிகாட்டுதல்கள் மேற்கொள்ளப்படாமையானது குறைந்தளவிலான சித்தி வீதத்திற்குக் காரணமாக அமையலாம்.

## 1.2.4 முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் கல்வி வலய அடிப்படையில்

**அட்டவணை 1.4**

கல்வி வலய அடிப்படையில் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொண்ட தரங்களின் பரம்பல்

| கல்வி வலயம் | தமிழ் மொழியும் இலக்கியமும் | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தோற்றியவர்களது எண்ணிக்கை | A | | B | | C | | S | | A+B+C+S | | W | |
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| கொழும்பு | 2,962 | 646 | 21.81 | 548 | 18.50 | 792 | 26.74 | 556 | 18.77 | 2,542 | 85.82 | 420 | 14.18 |
| ஹோமாகம | 138 | 12 | 8.70 | 18 | 13.04 | 33 | 23.91 | 36 | 26.09 | 99 | 71.74 | 39 | 28.26 |
| ஸ்ரீ ஜயவர்தனபுர | 27 | - | 0.00 | 7 | 25.93 | 14 | 51.85 | 5 | 18.52 | 26 | 96.30 | 1 | 3.70 |
| பிலியந்தலை | 139 | 35 | 25.18 | 23 | 16.55 | 40 | 28.78 | 27 | 19.42 | 125 | 89.93 | 14 | 10.07 |
| கம்பஹா | 351 | 51 | 14.53 | 68 | 19.37 | 92 | 26.21 | 70 | 19.94 | 281 | 80.06 | 70 | 19.94 |
| மினுவாங்கொட | 229 | 44 | 19.21 | 56 | 24.45 | 63 | 27.51 | 50 | 21.83 | 213 | 93.01 | 16 | 6.99 |
| நீர்கொழும்பு | 308 | 50 | 16.23 | 54 | 17.53 | 87 | 28.25 | 75 | 24.35 | 266 | 86.36 | 42 | 13.64 |
| களனி | 426 | 53 | 12.44 | 89 | 20.89 | 129 | 30.28 | 108 | 25.35 | 379 | 88.97 | 47 | 11.03 |
| களுத்தறை | 1,516 | 199 | 13.13 | 221 | 14.58 | 400 | 26.39 | 323 | 21.31 | 1,143 | 75.40 | 373 | 24.60 |
| மத்துகம | 189 | 18 | 9.52 | 25 | 13.23 | 44 | 23.28 | 45 | 23.81 | 132 | 69.84 | 57 | 30.16 |
| ஹோரண | 466 | 60 | 12.88 | 62 | 13.30 | 105 | 22.53 | 134 | 28.76 | 361 | 77.47 | 105 | 22.53 |
| கண்டி | 1,028 | 194 | 18.87 | 174 | 16.93 | 306 | 29.77 | 213 | 20.72 | 887 | 86.28 | 141 | 13.72 |
| தெனுவர | 550 | 127 | 23.09 | 96 | 17.45 | 129 | 23.45 | 122 | 22.18 | 474 | 86.18 | 76 | 13.82 |
| கம்பளை | 1,266 | 180 | 14.22 | 226 | 17.85 | 393 | 31.04 | 310 | 24.49 | 1,109 | 87.60 | 157 | 12.40 |
| தெல்தெனிய | 181 | 9 | 4.97 | 38 | 20.99 | 72 | 39.78 | 41 | 22.65 | 160 | 88.40 | 21 | 11.60 |
| வத்தேகம | 801 | 87 | 10.86 | 132 | 16.48 | 252 | 31.46 | 201 | 25.09 | 672 | 83.90 | 129 | 16.10 |
| கட்டுகஸ்தோட்டை | 883 | 96 | 10.87 | 136 | 15.40 | 248 | 28.09 | 212 | 24.01 | 692 | 78.37 | 191 | 21.63 |
| மாத்தளை | 1,195 | 145 | 12.13 | 182 | 15.23 | 339 | 28.37 | 290 | 24.27 | 956 | 80.00 | 239 | 20.00 |
| கலேவெல | 241 | 47 | 19.50 | 36 | 14.94 | 65 | 26.97 | 63 | 26.14 | 211 | 87.55 | 30 | 12.45 |
| நாவுல | 46 | 2 | 4.35 | 3 | 6.52 | 10 | 21.74 | 18 | 39.13 | 33 | 71.74 | 13 | 28.26 |
| வில்கமுவ | - | - | | - | | - | | - | | - | | - | |
| நுவரெலியா | 2,485 | 242 | 9.74 | 447 | 17.99 | 965 | 38.83 | 621 | 24.99 | 2,275 | 91.55 | 210 | 8.45 |
| கொத்மலை | 624 | 80 | 12.82 | 119 | 19.07 | 243 | 38.94 | 143 | 22.92 | 585 | 93.75 | 39 | 6.25 |
| ஹட்டன் | 2,559 | 638 | 24.93 | 599 | 23.41 | 854 | 33.37 | 354 | 13.83 | 2,445 | 95.55 | 114 | 4.45 |
| வலப்பனை | 560 | 66 | 11.79 | 132 | 23.57 | 205 | 36.61 | 130 | 23.21 | 533 | 95.18 | 27 | 4.82 |
| ஹங்குரன்கெத்த | 158 | 23 | 14.56 | 41 | 25.95 | 53 | 33.54 | 35 | 22.15 | 152 | 96.20 | 6 | 3.80 |
| காலி | 288 | 45 | 15.63 | 43 | 14.93 | 84 | 29.17 | 53 | 18.40 | 225 | 78.13 | 63 | 21.88 |
| எல்பிட்டிய | 46 | 6 | 13.04 | 4 | 8.70 | 12 | 26.09 | 13 | 28.26 | 35 | 76.09 | 11 | 23.91 |
| அம்பலாங்கொட | 14 | 4 | 28.57 | 4 | 28.57 | 3 | 21.43 | 3 | 21.43 | 14 | 100.00 | - | 0.00 |
| உடுகம | 23 | - | 0.00 | 6 | 26.09 | 4 | 17.39 | 11 | 47.83 | 21 | 91.30 | 2 | 8.70 |

| கல்வி வலயம் | தமிழ் மொழியும் இலக்கியமும் | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தோற்றியவர்களது எண்ணிக்கை | A | | B | | C | | S | | A+B+C+S | | W | |
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| மாத்தரை | 230 | 43 | 18.70 | 40 | 17.39 | 66 | 28.70 | 48 | 20.87 | 197 | 85.65 | 33 | 14.35 |
| அக்குரஸ்ஸ | 153 | 22 | 14.38 | 37 | 24.18 | 50 | 32.68 | 26 | 16.99 | 135 | 88.24 | 18 | 11.76 |
| முலடியன - ஹக்மன | 28 | 4 | 14.29 | 7 | 25.00 | 6 | 21.43 | 7 | 25.00 | 24 | 85.71 | 4 | 14.29 |
| மொறவக்க | 96 | 4 | 4.17 | 9 | 9.38 | 34 | 35.42 | 35 | 36.46 | 82 | 85.42 | 14 | 14.58 |
| தங்காலை | 9 | 1 | 11.11 | 1 | 11.11 | 2 | 22.22 | 2 | 22.22 | 6 | 66.67 | 3 | 33.33 |
| ஹம்பாந்தொட்டை | 175 | 27 | 15.43 | 24 | 13.71 | 42 | 24.00 | 38 | 21.71 | 131 | 74.86 | 44 | 25.14 |
| வலஸ்முல்லை | 14 | 2 | 14.29 | 2 | 14.29 | 1 | 7.14 | 6 | 42.86 | 11 | 78.57 | 3 | 21.43 |
| யாழ்ப்பாணம் | 3,057 | 1,087 | 35.56 | 656 | 21.46 | 686 | 22.44 | 405 | 13.25 | 2,834 | 92.71 | 223 | 7.29 |
| தீவகம் | 569 | 108 | 18.98 | 125 | 21.97 | 184 | 32.34 | 105 | 18.45 | 522 | 91.74 | 47 | 8.26 |
| தென்மராட்சி | 853 | 180 | 21.10 | 192 | 22.51 | 252 | 29.54 | 143 | 16.76 | 767 | 89.92 | 86 | 10.08 |
| வலிகாமம் | 2,448 | 459 | 18.75 | 467 | 19.08 | 712 | 29.08 | 503 | 20.55 | 2,141 | 87.46 | 307 | 12.54 |
| வடமராட்சி | 1,571 | 462 | 29.41 | 318 | 20.24 | 409 | 26.03 | 256 | 16.30 | 1,445 | 91.98 | 126 | 8.02 |
| கிளிநொச்சி தெற்கு | 1,701 | 354 | 20.81 | 351 | 20.63 | 540 | 31.75 | 306 | 17.99 | 1,551 | 91.18 | 150 | 8.82 |
| கிளிநொச்சி வடக்கு | 500 | 104 | 20.80 | 133 | 26.60 | 145 | 29.00 | 74 | 14.80 | 456 | 91.20 | 44 | 8.80 |
| மன்னார் | 1,275 | 261 | 20.47 | 251 | 19.69 | 438 | 34.35 | 257 | 20.16 | 1,207 | 94.67 | 68 | 5.33 |
| மடு | 342 | 49 | 14.33 | 87 | 25.44 | 135 | 39.47 | 62 | 18.13 | 333 | 97.37 | 9 | 2.63 |
| வவுனியா தெற்கு | 1,767 | 378 | 21.39 | 319 | 18.05 | 518 | 29.32 | 361 | 20.43 | 1,576 | 89.19 | 191 | 10.81 |
| வவுனியா வடக்கு | 528 | 104 | 19.70 | 102 | 19.32 | 165 | 31.25 | 118 | 22.35 | 489 | 92.61 | 39 | 7.39 |
| முல்லைத்தீவு | 1,235 | 278 | 22.51 | 306 | 24.78 | 371 | 30.04 | 190 | 15.38 | 1,145 | 92.71 | 90 | 7.29 |
| துணுக்காய் | 552 | 113 | 20.47 | 135 | 24.46 | 189 | 34.24 | 83 | 15.04 | 520 | 94.20 | 32 | 5.80 |
| மட்டக்களப்பு | 2,030 | 664 | 32.71 | 407 | 20.05 | 516 | 25.42 | 312 | 15.37 | 1,899 | 93.55 | 131 | 6.45 |
| கல்குடா | 1,607 | 208 | 12.94 | 270 | 16.80 | 481 | 29.93 | 382 | 23.77 | 1,341 | 83.45 | 266 | 16.55 |
| பட்டிருப்பு | 1,516 | 199 | 13.13 | 282 | 18.60 | 445 | 29.35 | 374 | 24.67 | 1,300 | 85.75 | 216 | 14.25 |
| மட்டக்களப்பு - மத்தி | 2,422 | 619 | 25.56 | 462 | 19.08 | 692 | 28.57 | 408 | 16.85 | 2,181 | 90.05 | 241 | 9.95 |
| மட்டக்களப்பு - மேற்கு | 940 | 133 | 14.15 | 182 | 19.36 | 294 | 31.28 | 217 | 23.09 | 826 | 87.87 | 114 | 12.13 |
| அம்பாறை | 1 | - | | -00 | | 1 | | - | | 1 | | - | |

| கல்வி வலயம் | தமிழ் மொழியும் இலக்கியமும் | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தோற்றியவர்களது எண்ணிக்கை | A | | B | | C | | S | | A+B+C+S | | W | |
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| கல்முனை | 2,879 | 759 | 26.36 | 587 | 20.39 | 799 | 27.75 | 494 | 17.16 | 2,639 | 91.66 | 240 | 8.34 |
| சம்மாந்துறை | 1,472 | 284 | 19.29 | 295 | 20.04 | 414 | 28.13 | 300 | 20.38 | 1,293 | 87.84 | 179 | 12.16 |
| மகா ஓயா | - | - | | - | | - | | - | | - | | - | |
| தெஹியத்தகண்டி | - | - | | - | | - | | - | | - | | - | |
| அக்கரைப்பற்று | 1,873 | 440 | 23.49 | 407 | 21.73 | 562 | 30.01 | 335 | 17.89 | 1,744 | 93.11 | 129 | 6.89 |
| திருக்கோவில் | 951 | 234 | 24.61 | 209 | 21.98 | 275 | 28.92 | 177 | 18.61 | 895 | 94.11 | 56 | 5.89 |
| திருகோணமலை | 1,892 | 427 | 22.57 | 358 | 18.92 | 503 | 26.59 | 335 | 17.71 | 1,623 | 85.78 | 269 | 14.22 |
| மூதூர் | 1,215 | 211 | 17.37 | 247 | 20.33 | 371 | 30.53 | 253 | 20.82 | 1,082 | 89.05 | 133 | 10.95 |
| கந்தளாய் | 164 | 17 | 10.37 | 30 | 18.29 | 47 | 28.66 | 30 | 18.29 | 124 | 75.61 | 40 | 24.39 |
| கிண்ணியா | 1,572 | 213 | 13.55 | 255 | 16.22 | 427 | 27.16 | 364 | 23.16 | 1,259 | 80.09 | 313 | 19.91 |
| திருகோணமலை வடக்கு | 24 | 1 | 4.17 | 6 | 25.00 | 6 | 25.00 | 7 | 29.17 | 20 | 83.33 | 4 | 16.67 |
| குருநாகல் | 533 | 76 | 14.26 | 84 | 15.76 | 143 | 26.83 | 120 | 22.51 | 423 | 79.36 | 110 | 20.64 |
| குளியாப்பிட்டிய | 308 | 58 | 18.83 | 66 | 21.43 | 91 | 29.55 | 56 | 18.18 | 271 | 87.99 | 37 | 12.01 |
| நிகவரெட்டிய | 258 | 48 | 18.60 | 49 | 18.99 | 83 | 32.17 | 47 | 18.22 | 227 | 87.98 | 31 | 12.02 |
| மாகோ | 205 | 29 | 14.15 | 38 | 18.54 | 59 | 28.78 | 46 | 22.44 | 172 | 83.90 | 33 | 16.10 |
| கிரியுள்ள | 632 | 119 | 18.83 | 152 | 24.05 | 185 | 29.27 | 118 | 18.67 | 574 | 90.82 | 58 | 9.18 |
| இப்பாகமுவ | 362 | 76 | 20.99 | 52 | 14.36 | 93 | 25.69 | 75 | 20.72 | 296 | 81.77 | 66 | 18.23 |
| புத்தளம் | 2,309 | 307 | 13.30 | 376 | 16.28 | 696 | 30.14 | 554 | 23.99 | 1,933 | 83.72 | 376 | 16.28 |
| சிலாபம் | 293 | 29 | 9.90 | 48 | 16.38 | 78 | 26.62 | 88 | 30.03 | 243 | 82.94 | 50 | 17.06 |
| அநுராதபுரம் | 306 | 22 | 7.19 | 37 | 12.09 | 89 | 29.08 | 92 | 30.07 | 240 | 78.43 | 66 | 21.57 |
| தம்புத்தேகம | - | - | | - | | - | | - | | - | | - | |
| கெக்கிராவை | 506 | 83 | 16.40 | 71 | 14.03 | 152 | 30.04 | 96 | 18.97 | 402 | 79.45 | 104 | 20.55 |
| கலென்பிதுனுவெவ | 245 | 40 | 16.33 | 48 | 19.59 | 65 | 26.53 | 49 | 20.00 | 202 | 82.45 | 43 | 17.55 |
| கெபித்திகொள்ளாவ | 243 | 69 | 28.40 | 52 | 21.40 | 69 | 28.40 | 37 | 15.23 | 227 | 93.42 | 16 | 6.58 |
| பொலன்னறுவை | 427 | 75 | 17.56 | 58 | 13.58 | 113 | 26.46 | 103 | 24.12 | 349 | 81.73 | 78 | 18.27 |
| ஹிங்குராக்கொடை | 14 | 1 | 7.14 | 2 | 14.29 | 3 | 21.43 | 4 | 28.57 | 10 | 71.43 | 4 | 28.57 |
| திம்புலாகல | 122 | 16 | 13.11 | 20 | 16.39 | 45 | 36.89 | 28 | 22.95 | 109 | 89.34 | 13 | 10.66 |
| பதுளை | 854 | 124 | 14.52 | 175 | 20.49 | 313 | 36.65 | 172 | 20.14 | 784 | 91.80 | 70 | 8.20 |
| பண்டாரவளை | 979 | 142 | 14.50 | 190 | 19.41 | 366 | 37.39 | 203 | 20.74 | 901 | 92.03 | 78 | 7.97 |
| மகியங்கனை | 9 | 3 | 33.33 | 3 | 33.33 | 3 | 33.33 | - | 0.00 | 9 | 100.00 | - | 0.00 |

| கல்வி வலயம் | தமிழ் மொழியும் இலக்கியமும் | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தோற்றியவர்களது எண்ணிக்கை | A | | B | | C | | S | | A+B+C+S | | W | |
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| வெலிமடை | 564 | 101 | 17.91 | 113 | 20.04 | 178 | 31.56 | 117 | 20.74 | 509 | 90.25 | 55 | 9.75 |
| பசறை | 626 | 76 | 12.14 | 117 | 18.69 | 231 | 36.90 | 124 | 19.81 | 548 | 87.54 | 78 | 12.46 |
| வியலுவ | 96 | 10 | 10.42 | 8 | 8.33 | 35 | 36.46 | 27 | 28.13 | 80 | 83.33 | 16 | 16.67 |
| மொனராகலை | 159 | 14 | 8.81 | 23 | 14.47 | 48 | 30.19 | 46 | 28.93 | 131 | 82.39 | 28 | 17.61 |
| வெல்லவாய | 12 | 1 | 8.33 | -00 | 0.00 | 5 | 41.67 | 3 | 25.00 | 9 | 75.00 | 3 | 25.00 |
| பிபிலை | 127 | 13 | 10.24 | 19 | 14.96 | 49 | 38.58 | 31 | 24.41 | 112 | 88.19 | 15 | 11.81 |
| தனமல்வில | -00 | -00 | | -00 | | -00 | | -00 | | -00 | | -00 | |
| இரத்தினபுரி | 602 | 77 | 12.79 | 96 | 15.95 | 197 | 32.72 | 141 | 23.42 | 511 | 84.88 | 91 | 15.12 |
| பலாங்கொடை | 424 | 106 | 25.00 | 88 | 20.75 | 124 | 29.25 | 76 | 17.92 | 394 | 92.92 | 30 | 7.08 |
| நிவித்திகல | 238 | 16 | 6.72 | 40 | 16.81 | 93 | 39.08 | 60 | 25.21 | 209 | 87.82 | 29 | 12.18 |
| எம்பிலிபிட்டி | 254 | 57 | 22.44 | 49 | 19.29 | 89 | 35.04 | 50 | 19.69 | 245 | 96.46 | 9 | 3.54 |
| கேகாலை | 205 | 29 | 14.15 | 34 | 16.59 | 52 | 25.37 | 46 | 22.44 | 161 | 78.54 | 44 | 21.46 |
| மாவனெல்லை | 997 | 238 | 23.87 | 231 | 23.17 | 280 | 28.08 | 149 | 14.94 | 898 | 90.07 | 99 | 9.93 |
| தெஹியோவிட்ட | 797 | 154 | 19.32 | 130 | 16.31 | 264 | 33.12 | 159 | 19.95 | 707 | 88.71 | 90 | 11.29 |
| மொத்தம் | **71,066** | **13,817** | **19.44** | **13,617** | **19.16** | **21,105** | **29.70** | **14,192** | **19.97** | **62,731** | **88.27** | **8,335** | **11.73** |

**மூலம்** ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

இலங்கையிலுள்ள 100 கல்வி வலயங்களுள் அம்பாந்தோட்டை, மகியங்கனை, மடு, எம்பிலிப்பிட்டி, ஸ்ரீ ஜயவர்த்தனபுர, ஹங்குரங்கெத்த, ஹட்டன், வலப்பனை ஆகிய கல்வி வலயங்கள் 95% க்கும் மேலான சித்திவீதத்தைப் பெற்றுள்ளமையை அட்டவணை காண்பிக்கின்றது.

யாழ்ப்பாணம், கல்முனை, மட்டக்களப்பு, ஹட்டன், மட்டக்களப்பு மத்தி ஆகிய கல்வி வலயங்களில் அதிவிசேட சித்தியை (A) அதிகமான பரீட்சார்த்திகள் பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

தங்காலை, ஹிங்குராக்கொட ஆகிய கல்வி வலயங்களில் குறைந்தளவான பரீட்சார்த்திகளே பரீட்சைக்குத் தோற்றியுள்ளபோதிலும் அவர்களுள் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையும் குறைந்தளவாகவே காணப்படுகின்றன.

கொழும்பு, களுத்துறை, மாத்தளை, புத்தளம், கிண்ணியா, வலிகாமம் ஆகிய வலயங்களில் சித்தியடையத் தவறிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகக் காணப்படுவதை அட்டவணை காண்பிக்கின்றது.

### 1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்றுள்ள விதம்

**அட்டவணை 1.5**

வகுப்பாயிடை அடிப்படையில் பரீட்சார்த்திகள் புள்ளிகள் பெற்றுள்ள விதம்

| வகுப்பாயிடை | மீடிறன் | சதவீத மீடிறன் | திரள் மீடிறன். | சதவீத திரள் மீடிறன் |
|---|---|---|---|---|
| 91-100 | 90 | 0.11 | 83,043 | 100.00 |
| 81-90 | 3,978 | 4.79 | 82,953 | 99.89 |
| 71-80 | 11,352 | 13.67 | 78,975 | 95.10 |
| 61-70 | 14,196 | 17.09 | 67,623 | 81.43 |
| 51-60 | 14,138 | 17.02 | 53,427 | 64.34 |
| 41-50 | 13,712 | 16.51 | 39,289 | 47.31 |
| 31-40 | 12,310 | 14.82 | 25,577 | 30.80 |
| 21-30 | 7,979 | 9.61 | 13,267 | 15.98 |
| 11-20 | 3,926 | 4.73 | 5,288 | 6.37 |
| 00-10 | 1,362 | 1.64 | 1,362 | 1.64 |

**மூலம்**: ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி.

பரீட்சைக்குத் தோற்றிய 83,043 பரீட்சார்த்திகளுள் 52.68% ஆனோர் 50 புள்ளிகளுக்கும் மேல் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பரீட்சையில் 14,196 பரீட்சார்த்திகள் 61 – 70 க்கு இடைப்பட்ட வகுப்பாயிடையில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இது 17.09% ஆகும். அத்துடன் மிகச்சிறந்த பெறுபேறாகவும் கொள்ளப்படுகின்றது.

இப்பரீட்சையில் 30 புள்ளிகளுக்குக்கீழ் 15.98% ஆன பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இது புள்ளிகளைப் பெறுவதில் காணப்படும் வீழ்ச்சி எனக் கருத முடியும்.

அத்துடன் ஒரு பரீட்சார்த்தி பூச்சியப் புள்ளியைப் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பகுதி 2

**2. வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும் - வினாப்பத்திரம் - I**

**2.1 தமிழ் மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் I இன் கட்டமைப்பு**

**வினாப்பத்திரம் I**

நேரம்: 01 மணித்தியாலம். மொத்தப் புள்ளிகள் 40 ஆகும்.

இந்த வினாப்பத்திரத்தில் 40 பல்தேர்வு வினாக்கள் அடங்கும்.

எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் கட்டாயமானதாகும்.

ஒரு வினாவுக்கு 01 புள்ளி வீதம் மொத்தமாக 40 புள்ளிகள் வழங்கப்படும்.

**மூலம்** : க.பொ.த (சா.தரம்) வினாப்பத்திர கட்டமைப்பு மற்றும் முன்னோடி வினாக்கள், 2016, இ.ப.தி

## 2.2 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**22 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Ord. Level) Examination, 2022(2023)

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය I, II
தமிழ் மொழியும் இலக்கியமும் I, II
Tamil Language and Literature I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

### தமிழ் மொழியும் இலக்கியமும் I

**அறிவுறுத்தல்கள் :**

- ※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் **I** இற்குரிய புள்ளிகள் **40** ஆகும்.
- ※ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
- ※ **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
- ※ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

● **தடித்த எழுத்தில்** அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**1.** 'பங்கப் பழனத் துழுமுழவர்' - இங்கு **பங்கம்** என்பது
(1) பிளவு (2) சேறு (3) சேதம் (4) வளைவு

**2.** 'தச்சன் செய்த சிறுமா வையம்' - இங்கு **வையம்** என்பது
(1) உலகம் (2) பல்லக்கு (3) தேர் (4) வீடு

**3.** 'ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர்' - இங்கு **ஏதிலார்** என்பதன் எதிர்க்கருத்து
(1) உதவியற்றோர் (2) காரணம் அற்றோர் (3) பகைவர் (4) உறவினர்

**4.** 'இலட்சியங்களும் இலட்சியவாதிகளும் அபின்னம்' - இங்கு **அபின்னம்** என்பதன் எதிர்க்கருத்து
(1) பின்னம் (2) முன்னம் (3) பேதமின்மை (4) ஒற்றுமை

**5.** 'சினிமா மொழி நமக்குப் பரிச்சயமில்லாத ஒன்றாக இருக்கிறது' - **பரிச்சயம்** என்பது
(1) சோதனை (2) பழக்கம் (3) உடன்பாடு (4) வழக்கம்

● பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

**6.** பொருள் தொடர்பின் அடிப்படையில் நோக்கும்போது **வேறுபட்டு** நிற்கும் சொற்களின் இணைவு
(1) ஆம்பல் - தாமரை (2) கயல் - வரால்
(3) மூங்கில் - பனை (4) மலர் - இலை

**7.** ஒரே பொருளைக் குறிக்கும் சொற்களைக் கொண்ட தொகுதி
(1) புலன், கரணம், ஆவி (2) கானகம், காடு, வனம்
(3) பலம், மூலம், சாகம் (4) அளி, வளை, மேதி

**8.** ஊரவர் உபயோகத்துக்கு உரிய பொது நீர்நிலை
(1) ஊருணி (2) ஊர்மன்று (3) ஊராட்சி (4) ஊரம்பலம்

**9.** சினிமாத் துறையில் புழக்கத்தில் உள்ள editing என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகராகத் தமிழில் வழங்கும் கலைச்சொல்
(1) பதிப்பு (2) படத்தொகுப்பு (3) ஒளிப்பதிவு (4) ஒலிப்பதிவு

**10.** ஏதேனும் ஒன்றை மிகுந்த ஈடுபாட்டோடு இலயித்துப் பார்ப்பதைக் குறிப்பிடுவதற்கு மிகப்பொருத்தமான அருஞ்சொற்றொடர்

(1) வழிமேல் விழி வைத்து
(2) அகமும் முகமும் மலர
(3) வைத்தகண் வாங்காமல்
(4) உள்ளத்தில் உவகை பொங்க

**11.** பிடிவாதம் செய்தலைக் குறிக்கும் மரபுத்தொடர்

(1) கங்கணம் கட்டுதல்
(2) ஒற்றைக்காலில் நிற்றல்
(3) கொம்பு சீவிவிடுதல்
(4) வரிந்துகட்டி நிற்றல்

**12.** 'பசுமரத்தாணிபோல்' என்னும் உவமைத் தொடரால் உணர்த்தப்படுவது

(1) இலகுவாகவும் நீங்கா வகையிலும் மனதில் பதிதல்
(2) மறக்க முடியாத வகையில் மனவேதனைப் படுதல்
(3) கண்ணுக்குப் புலனாகா வகையில் மறைந்து போதல்
(4) மீட்டெடுக்க முடியா வகையில் ஆழமாகப் பதிதல்

**13.** ஒத்த பொருள்தரும் சொற்களால் ஆன இணைமொழி

(1) ஊண்உறக்கம் (2) கள்ளம்கபடம் (3) அருமைபெருமை (4) வீடுவாசல்

**14.** ஒலிக்குறிப்புச்சொல் இடம்பெற்ற தொடர்

(1) கடலின் சீற்றம் துல்லியமாகக் கேட்டது.
(2) வானம் பளிச்சென்று இருந்தது.
(3) அது பேசாமல் கம்மென்று இருந்தது.
(4) அவள் கலீர் எனச் சிரித்தாள்

**15.** முக்கியத்துவம் வாய்ந்த விடயத்தை விட்டு, முக்கியத்துவம் அற்ற விடயத்தில் கவனம் செலுத்தக்கூடாது என்பதை வலியுறுத்தும் பழமொழி

(1) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
(2) தும்பை விட்டு வாலைப் பிடிக்காதே
(3) மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?
(4) மலையைக் கல்லி எலியைப் பிடித்தல்

**16.** இருபத்தைந்து ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா

(1) வெள்ளிவிழா (2) பொன்விழா (3) அமுதவிழா (4) பவளவிழா

**17.** தொகுத்துக் கட்டிய பூக்களின் கூட்டத்தைச் சுட்டுவதற்குப் **பொருத்தமற்ற** சொல்

(1) கொத்து (2) மஞ்சரி (3) கற்றை (4) செண்டு

**18.** 'வயல்வெளி பச்சைப்பசேல் என்று இருந்தது' - இங்கு **பச்சைப்பசேல்** என்பது

(1) அடுக்குத்தொடர்
(2) அடுக்கிடுக்குத்தொடர்
(3) இரட்டைக்கிளவி
(4) இணைமொழி

**19.** **பொருத்தமற்ற** சொல்லைக் கொண்ட தொகுதி

(1) ஆடு : கடா, மறி, குட்டி
(2) கோழி : சேவல், பேடு, குஞ்சு
(3) மான் : கலை, பிணை, பிள்ளை
(4) மாடு : எருது, பசு, கன்று

**20.** ஆபரணம், கடமை, பாம்பு என்னும் பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல்

(1) அரவம் (2) கலம் (3) பணி (4) சர்ப்பம்

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **மிகச் சரியான** விடையைத் தெரிவுசெய்க.

**21.** ககர மெய் ஒலிப்பால் **வேறுபட்ட** வகையில் இடம்பெறும் சொல்

(1) பாகம் (2) நகம் (3) வேகம் (4) தங்கம்

**22.** பகுதி விகாரப்பட்ட சொல்

(1) செய்தான் (2) கண்டான் (3) நடந்தான் (4) பாடுகிறான்

**23.** 'ன்' என்னும் இடைநிலை இடம்பெற்ற சொல்

(1) போனான் (2) ஓடினான் (3) பாடுகின்றான் (4) சென்றது

**24.** 'ஆல்' உருபு காரணப் பொருளில் இடம்பெற்ற தொடர்
(1) கத்தியால் உண்டான காயம்
(2) கம்பனால் பாடப்பட்ட காவியம்
(3) வேகத்தால் ஏற்பட்ட விபரீதம்
(4) வீதியால் சென்ற ஊர்வலம்

**25.** தோன்றல் விகாரம் இடம்பெற்ற சொல்
(1) நெற்குவியல் (2) வில்லிசை (3) தேனீ (4) மரவேர்

**26.** பின்வருவனவற்றுள் பண்புத்தொகை
(1) நீளக்காற்சட்டை (2) நிலவுலகு (3) புயற்காற்று (4) ஊர்ப்பாடசாலை

**27.** மூவிடத்துக்கும் பொதுவான வினைமுற்று
(1) வந்தேன் (2) செய்வான் (3) வாருங்கள் (4) முடியும்

**28.** அகராதி ஒழுங்கில் **அமையாத** சொற்றொகுதி
(1) கல்லு, முள்ளு, வீடு, வெளி
(2) கட்டில், மெத்தை, யானை, பூனை
(3) கரும்பு, சட்டி, தாமரை, மாடு
(4) எறும்பு, நெருப்பு, பரிவு, வண்டு

● **பொருத்தமற்ற** உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவுசெய்க.

**29.** (1) உருவக அணி : உள்ளக்கமலம், வேலைப்பழு, புத்தகப்பொதி
(2) வினைத்தொகை : கொதிநிலை, ஏவுகணை, ஓடுபாதை
(3) இலக்கணப்போலி : முன்றில், கடைவாய், புறநகர்
(4) மரூஉ : அருமந்த, சோணாடு, யாழ்நகர்

**30.** (1) தனிப்பெயரடை : மலர்ந்த, ஆழ்ந்த, முடிந்த
(2) தனிவினையடை : நேற்று, முன்பு, இன்று
(3) ஆக்கப்பெயரடை : விரைவான, ஆறுதலாக, மகிழ்ச்சிகரமான
(4) ஆக்கவினையடை : விரைவாக, விருப்பமாக, ஆறுதலாக

● புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு **மிகப் பொருத்தமான** சொல்லைத் தெரிவுசெய்க.

**31.** விவசாயத்துறையை மேம்படுத்தும் நோக்கில் விவசாயிகளுக்கு உரத்தை .................... வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.
(1) நிவாரணமாக
(2) மானியமாக
(3) அனுசரணையாக
(4) காப்புறுதியாக

**32.** மாவட்ட நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் .................... செய்யப்பட்டது.
(1) வழக்குத் தாக்கல்
(2) விசாரணை
(3) மேன்முறையீடு
(4) தள்ளுபடி

**33.** அரசர்களின் புகழை பல வகையிலும் விரித்துரைப்பதையே நோக்கமாகக் கொண்ட .................... சோழர் காலத்தில் எழுந்தன.
(1) கல்வெட்டுகள்
(2) சாசனங்கள்
(3) மெய்க்கீர்த்திகள்
(4) சுவடிகள்

**34.** தெனாலிராமனின் நகைச்சுவை உணர்வு அரசவை .................... என்னும் அந்தஸ்தை அவனுக்குப் பெற்றுக்கொடுத்தது.
(1) ஆசுகவி
(2) கவிச்சக்கரவர்த்தி
(3) விஸ்தாரகவி
(4) விகடகவி

● வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான **முடிக்கும் பகுதியைத்** தெரிவுசெய்க.

**35.** உலகிலுள்ள ஒவ்வொரு உயிரும் சுதந்திரமாக அச்சமின்றி வாழவே .,.................... .
(1) விரும்பும்
(2) விரும்புகின்றன
(3) விரும்புகின்றனர்
(4) விரும்பக்கூடும்

**36.** நீயும் ஏனைய நண்பர்களும் ஒத்துழைப்பீர்களாயின் எங்கள் திட்டம் வெற்றிகரமாக .................... .
(1) நிறைவேற்றுவோம்
(2) நிறைவேற்றுவேன்
(3) நிறைவேறும்
(4) நிறைவேற்றுவீர்கள்

- கீழே தரப்பட்டுள்ள கவிதையை அடிப்படையாகக் கொண்டு **37** தொடக்கம் **39** வரையான வினாக்களுக்கு விடை தருக.

உச்சிமலை உறவாடும் முகில்களோடே
ஊரெல்லாம் நதியோடும் வயல்களூடே
இச்சைபோல் நீரளிக்கும் ஏரி; ஈடே
இல்லாதெலாம் நிறைந்த தெமது நாடே!
பச்சைப் பசேல் என்ற பள்ளத் தாக்கு;
பால்கொட்டும் நீர்வீழ்ச்சி; தேக்கங்காடு
மெச்சிக் களைத்தேன் வா, வந்திந் நாட்டின்
மேன்மைக்கு நீ மேலும் வழிகள் காட்டு.

**37.** இக் கவிதையில் விடுக்கப்படும் அறைகூவல் எதற்கானது?
(1) நாட்டு வளத்தை எடுத்துரைப்பதற்கானது
(2) நாட்டுப் பற்றை வெளிப்படுத்துவதற்கானது
(3) நாட்டின் அழகை விவரிப்பதற்கானது
(4) தேசத் தொண்டு புரிய வலியுறுத்துவதற்கானது

**38.** வளம் சிறந்த நாடு என்பதை அதிகம் வலியுறுத்தி நிற்கும் தொடர்
(1) உச்சிமலை உறவாடும் முகில்களோடே
(2) ஊரெல்லாம் நதியோடும் வயல்களூடே
(3) இச்சைபோல் நீரளிக்கும் ஏரி
(4) ஈடே இல்லாதெலாம் நிறைந்தது

**39.** இங்கு இடம்பெற்றுள்ள உருவக அணிக்கு அடிப்படையாக அமைந்த ஒப்புமைக்கு உரிய விடயம்
(1) நிறம் (2) வடிவம் (3) பயன் (4) தொழில்

**40.** கீழே, சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெறவைத்தால், கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.
அ - அத்தகைய பயன்மிக்க செய்தியை எடுத்துரைப்பதால் மாத்திரம் எதுவும் இலக்கியமாகிவிட முடியாது.
ஆ - அச்செய்தியை கவர்ச்சியாக எடுத்துரைக்கும்போதே அது இலக்கியமாகின்றது.
இ - அந்தச் செய்தி உலகின் ஈடேற்றத்துக்கு உதவுவதாயின் இலக்கியம் பயன்மிக்கதாக அமையும்.
ஈ - இலக்கியம் என்பது ஏதேனும் ஒரு செய்தியை உலகுக்கு எடுத்துரைப்பதாகும்.
உ - அத்தகைய இலக்கியமே மக்கள் மனங்களில் பதிந்து பயன் விளைவிக்கும்.
(1) அ, இ, உ, ஆ, ஈ (2) ஆ, ஈ, உ, இ, அ
(3) ஈ, இ, அ, ஆ, உ (4) ஈ, இ, ஆ, உ, அ

❊❊

**2.3 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் I இற்கான புள்ளி வழங்கும் திட்டம்**

**அட்டவணை 2.1**

புள்ளி வழங்கும் திட்டம்

| வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|
| 1 | **2** | 21 | **4** |
| 2 | **3** | 22 | **2** |
| 3 | **4** | 23 | **1** |
| 4 | **1** | 24 | **3** |
| 5 | **2** | 25 | **2** |
| 6 | **4** | 26 | **1** |
| 7 | **2** | 27 | **4** |
| 8 | **1** | 28 | **2** |
| 9 | **2** | 29 | **1** |
| 10 | **3** | 30 | **3** |
| 11 | **2** | 31 | **2** |
| 12 | **1** | 32 | **3** |
| 13 | **2** | 33 | **3** |
| 14 | **4** | 34 | **4** |
| 15 | **2** | 35 | **1** |
| 16 | **1** | 36 | **3** |
| 17 | **3** | 37 | **4** |
| 18 | **2** | 38 | **4** |
| 19 | **3** | 39 | **1** |
| 20 | **3** | 40 | **3** |

ஒரு வினாவுக்கு 01 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் 40 ஆகும்.

**மூலம்**: க.பொ.த (சா.தரம்) தமிழ்மொழியும் இலக்கியமும், புள்ளி வழங்கும் திட்டம், 2022, இ.ப.தி

## 2.4 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் I இல் பல்தேர்வு வினாக்களுக்கு விடைகளைத் தெரிவுசெய்துள்ள விதம்

**அட்டவணை 2.2**

ஒவ்வொரு வினாவிற்கும் பரீட்சார்த்திகளால் தெரிவுசெய்யப்பட்டுள்ள விடைகளின் சதவீதம்

| வினா இல. | சரியான தெரிவு | ஒவ்வொரு தெரிவினையும் தெரிவுசெய்தோர் வீதம் (%) | | | |
|---|---|---|---|---|---|
| | | **1** | **2** | **3** | **4** |
| 1 | **2** | 4.43 | 90.27 | 4.27 | 0.97 |
| 2 | **3** | 10.27 | 5.00 | 79.77 | 4.77 |
| 3 | **4** | 7.80 | 9.47 | 22.57 | 59.90 |
| 4 | **1** | 43.37 | 9.97 | 25.47 | 20.87 |
| 5 | **2** | 3.93 | 78.80 | 11.13 | 5.93 |
| 6 | **4** | 9.20 | 23.47 | 36.23 | 30.77 |
| 7 | **2** | 4.43 | 85.40 | 5.90 | 4.20 |
| 8 | **1** | 43.50 | 22.03 | 21.10 | 13.03 |
| 9 | **2** | 7.60 | 76.63 | 12.40 | 3.13 |
| 10 | **3** | 22.37 | 6.90 | 67.13 | 3.40 |
| 11 | **2** | 3.17 | 93.17 | 2.20 | 1.30 |
| 12 | **1** | 38.57 | 15.80 | 9.30 | 35.97 |
| 13 | **2** | 7.73 | 51.43 | 23.07 | 17.60 |
| 14 | **4** | 21.47 | 11.90 | 10.00 | 56.33 |
| 15 | **2** | 7.60 | 76.23 | 7.60 | 8.53 |
| 16 | **1** | 61.43 | 14.87 | 13.70 | 9.60 |
| 17 | **3** | 11.87 | 21.73 | 50.33 | 15.87 |
| 18 | **2** | 12.50 | 56.97 | 5.10 | 25.00 |
| 19 | **3** | 3.40 | 6.97 | 85.27 | 4.07 |
| 20 | **3** | 33.00 | 12.33 | 41.00 | 13.03 |
| 21 | **4** | 6.50 | 10.03 | 6.57 | 76.67 |
| 22 | **2** | 7.63 | 36.03 | 17.70 | 38.27 |
| 23 | **1** | 25.27 | 12.43 | 39.23 | 22.80 |
| 24 | **3** | 32.97 | 19.80 | 39.27 | 7.67 |
| 25 | **2** | 29.63 | 40.97 | 17.97 | 11.13 |
| 26 | **1** | 59.10 | 15.43 | 13.17 | 11.97 |
| 27 | **4** | 7.63 | 8.90 | 13.70 | 69.63 |
| 28 | **2** | 11.53 | 39.23 | 25.67 | 23.43 |
| 29 | **1** | 44.37 | 18.27 | 19.40 | 17.80 |
| 30 | **3** | 11.30 | 16.83 | 60.00 | 11.73 |
| 31 | **2** | 21.23 | 67.40 | 6.77 | 4.47 |
| 32 | **3** | 31.63 | 13.23 | 51.57 | 3.37 |
| 33 | **3** | 19.70 | 14.27 | 50.80 | 15.07 |
| 34 | **4** | 7.73 | 17.27 | 5.90 | 68.90 |
| 35 | **1** | 35.23 | 49.93 | 9.83 | 4.80 |
| 36 | **3** | 6.67 | 2.97 | 88.33 | 1.93 |
| 37 | **4** | 54.23 | 6.30 | 18.60 | 20.63 |
| 38 | **4** | 5.90 | 31.33 | 7.77 | 54.67 |
| 39 | **1** | 24.20 | 33.17 | 29.83 | 12.27 |
| 40 | **3** | 2.23 | 4.43 | 82.23 | 10.90 |


**மூலம் :** ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022, இ.ப.தி.

சரியான விடையைத் தெரிவுசெய்துள்ள பரீட்சார்த்திகளின் சதவீதம் நிழற்றப்பட்டுள்ளது.

## 2.5 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் I இன் வினாக்களின் இலகுதன்மைச்சுட்டிகள்

**வரைபு 2.1**

வினாப்பத்திரம் I இன் வினாக்களுக்கான இலகுதன்மைச்சுட்டிகள்





**மூலம் : RD/16/05/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

## 2.6 பாடப்பரப்பு அடிப்படையில் வினாப்பத்திரம் I இன் வினாக்களின் இலகுதன்மைச்சுட்டிகள்

**வரைபு 2.2**

பாடப்பரப்பு அடிப்படையில் வினாப்பத்திரம் I இன் வினாக்களின் இலகுதன்மைச்சுட்டிகள்




**மூலம் : RD/16/05/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

**2.7 வினாப்பத்திரம் I இற்கான பகுப்பாய்வு**

| வினா இல. | தொனிப்பொருள் | இலகுதன்மை கூடிய வினாவும் அதன் இலகு தன்மையும் | இலகுதன்மை குறைந்த வினாவும் அதன் இலகு தன்மையும் |
|---|---|---|---|
| 01 - 20 | மொழிவளத்தைக் கணிப்பிடல் | 1 (90%)<br>11 (93%)<br>7 (85%)<br>19 (85%) | 6 (30%)<br>12 (38%) |
| 21 - 30 | இலக்கணத்திறன் | 21 (76%)<br>27 (69%) | 23 (25%)<br>22 (36%) |
| 31 - 40 | கிரகித்தல், மொழியமைப்பு, பந்தியாக்கம் | 36 (88.33%)<br>40 (82%) | 37 (20.63%)<br>39 (24.20%) |

- மொழிவளத்தைக் கணிப்பிடும் 1 – 20 வரையான வினாக்களில் அவதானிக்கப்பட்டவை.

* 11 ஆம் வினாவிற்கு 93% ஆனோர் சரியாக விடையளித்துள்ளனர். இந்த வினா இலகுதன்மை அதிகமுடையதாகக் காணப்படுகின்றது. நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புடையதாக அமைந்திருந்தமையே இதற்குக் காரணமாகும்.

* 6 ஆம் வினாவிற்கு 30% ஆனோர் சரியாக விடையளித்துள்ளனர். இந்த வினா இலகுதன்மை குறைந்ததாகக் காணப்படுகின்றது. பொருள் தொடர்பின் அடிப்படையில் வேறுபட்டு நிற்கும் சொற்களை நாளாந்த வாழ்வில் (நடைமுறையில்) பயன்படுத்ததாமையே இதற்குக் காரணம் எனலாம்.

- மாணவர்களிடையே மொழிவளம் தொடர்பான அறிவை வளர்ப்பதற்குக் கையாள வேண்டிய உத்திகள் பின்வருமாறு,
  * பாடநூல்களிலுள்ள மரபுத்தொடர்களை கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின்போது பயன்படுத்துதல்.
  * போதியளவு பயிற்சிகளை வழங்குதல்.
  * சொற்களஞ்சியத்தை விருத்தி செய்யும் வகையில் பாடநூலைத் தொடர்புபடுத்திக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை மேம்படுத்துதல்.

- இலக்கணப் பயன்பாட்டுத் திறனைக் கணிப்பிடும் 21 – 30 வரையான வினாக்களில் அவதானிக்கப்பட்டவை,
  * 21 ஆம் வினாவிற்கு 76.67% ஆனோர் சரியான விடையை அளித்துள்ளனர். அந்த வினா இலகுதன்மை கூடியதாக உள்ளது.
  * 23 ஆம் வினாவிற்கு 25.27% ஆனோர் விடையளித்துள்ளனர். **பதவியல்** தொடர்பில் போதிய தெளிவின்மையாலும் கொடுக்கப்பட்ட விடைகளை மாணவர்கள் விளங்கிக்கொள்வதில் ஏற்பட்ட சிரமம் காரணமாகவும் இந்த வினா இலகுதன்மை குறைந்ததாகப் பரீட்சார்த்திகளுக்கு அமைந்திருந்தது.
  * இலக்கணப் பயன்பாட்டுத் திறனைக் கணிப்பிடும் 21 – 30 வரையான 10 வினாக்களில் 50% க்கு மேற்பட்ட பரீட்சார்த்திகள் சரியாக விடையளிக்கவில்லை.
  * குறிப்பாக, 22 ஆம் வினாவிற்கு 36.03% ஆனோர் மாத்திரமே சரியான விடையை அளித்துள்ளனர். பதவியலில், **பகுபத** உறுப்புக்கள் பற்றிய தெளிவின்மையால், இந்த வினாவிற்கு 63.97% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையை அளிக்கத் தவறிவிட்டனர்.
  * 24, 28 ஆம் வினாக்களுக்கு 39% ஆன பரீட்சார்த்திகளே சரியான விடையை அளித்துள்ளனர். வேற்றுமை, அகராதி ஒழுங்கு என்பவற்றைச் சரியாகத் தெரிந்து கொள்ள முடியாத 61% ஆன பரீட்சார்த்திகள் இந்த வினாவிற்குச் சரியான விடையை அளிக்கத் தவறிவிட்டனர்.
- இலக்கணப் பயன்பாட்டுத் திறனை விருத்தி செய்வதற்கான ஆலோசனைகள்
  * இலக்கண விதிகளை வெறும் கோட்பாடுகளாகக் கற்காமல், அன்றாட வாழ்க்கையில் அல்லது படைப்புக்களில் அவை எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதை உதாரணங்களுடன் கற்பது சிறந்த பலனைப் பெற்றுத் தரும்.
  * மாணவர்கள் இலக்கணத்தினை நன்கு புரிந்துகொள்ளத் தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்குதல் வேண்டும்.
  * 23 ஆம் வினாவிற்குப் **பதவியலில்** பகுபத உறுப்புக்களைச் சரியானமுறையில் இனங்காண வைத்தல்.

    உதாரணம்:

    போனான் = போ + ன் + ஆன்

    ஓடினான் = ஓடு + இன் + ஆன்

    பாடுகின்றான் = பாடு + கின்று + ஆன்

    சென்றது = செல் + ற் + அது
  * வேற்றுமை உருபுகள், அவற்றின் பொருள் என்பனபற்றியும் அறிந்துகொள்வதற்குப் போதியளவு பயிற்சியளித்தல் வேண்டும்.

- கிரகித்தல், மொழிப் பிரயோகம், பந்தியாக்கத் திறனைக் கணிப்பிடும் 31 – 40 வரையான வினாக்களில் அவதானிக்கப்படவை,
    - * 1 ஆம் வினாப்பத்திரத்தின் 36 ஆம் வினாவிற்கு 88% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையை அளித்துள்ளனர்.
    - * 37 ஆம் வினாவிற்கு 20.63% ஆன பரீட்சார்த்திகளே சரியான விடையை அளித்துள்ளனர். 35, 39 ஆம் வினாக்களுக்கு முறையே 35.23%, 24.20% ஆன பரீட்சார்த்திகளே சரியான விடையை அளித்துள்ளனர்.
    - * 37 ஆம் வினா கிரகித்தல் தொடர்பானது, கிரகித்தல் தொடர்பான தெளிவின்மையால் 79.37% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையை அளிக்கத் தவறியுள்ளனர்.
    - * 39 ஆம் வினா அணி தொடர்பானது, அணிகள் அதன் பிரயோகம் தொடர்பான போதிய தெளிவின்மையால் 75.8% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையை அளிக்கத் தவறியுள்ளனர்.
    - * 35 ஆம் வினாவில் திணை, பால், எண் என்பவற்றின் வேறுபாடுகள், அவற்றின் பிரயோகம் தொடர்பான போதிய தெளிவின்மையால் 64.77% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையை அளிக்கத் தவறியுள்ளனர்.
- கிரகித்தல், மொழிப் பிரயோகம், பந்தியாக்கம் என்பவற்றை விருத்தி செய்வதற்கான ஆலோசனைகள்
    - * நாளாந்த வாழ்க்கையுடன் தொடர்புடைய விடயங்களை அறிந்து அவை தொடர்பான தகவல்களைச் சேகரிக்க மாணவர்களை ஊக்குவித்தல்.
    - * மாணவர்கள் இவற்றினை நன்கு புரிந்துகொள்ளத் தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்குதல்.
    - * சொற்களில் திணை, பால், எண், இடம் என்பவற்றைக் கூறவைத்து அவை தொடர்பான பயிற்சிகளை வழங்குதல்.

# பகுதி III

## 3. வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும் - வினாப்பத்திரம் - II

### 3.1 தமிழ் மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு

**வினாப்பத்திரம் II**

வினாத்தாள் II - 02 மணித்தியாலங்கள்

5 வினாக்களைக் கொண்டது.

மொத்தப் புள்ளிகள் 80 ஆகும்.

எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

வினா 1 : 10 குறுவிடை வினாக்களைக் கொண்டது. ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 20 ஆகும்.

வினா 2 : கட்டுரை எழுதுதல் : 25 புள்ளிகள் ஆகும். (வழிகாட்டற் குறிப்புகளுடனான நான்கு கருப்பொருள்களுள் ஒன்றினைத் தெரிவு செய்தல் வேண்டும்.)

வினா 3 : சுருக்கம் எழுதுதல் : 10 புள்ளிகள்

வினா 4 : கிரகித்தல் : 10 புள்ளிகள்


வினா 5 : நடைமுறைத் தேவைகளுக்கான எழுத்தாக்கங்கள் : 15 புள்ளிகள்

**மூலம்** : க.பொ.த (சா.தரம்) வினாப்பத்திரக் கட்டமைப்பு மற்றும் முன்னோடி வினாக்கள், 2016, இ.ப.தி

## 3.2 வினாப்பத்திரம் II இற்கான பகுப்பாய்வு

**வரைபு 3.1**

வினாப்பத்திரம் II இன் வினாக்களைத் தெரிவுசெய்துள்ள விதமும் அவற்றின் இலகுதன்மையும்





**மூலம் : RD/16/03/OL, RD/16/04/OL** பத்திரங்களின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

இவ்வினாப்பத்திரம் 5 வினாக்களைக் கொண்டது. குறுவிடை வினாக்கள் 10, கட்டுரை எழுதுதல், கிரகித்தல், நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுதல் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள், 5 வினாக்களுக்குமான தெரிவுகள் 95% க்கு மேற்பட்டதாக இருந்தபோதும் அவற்றின் இலகுதன்மையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

5 உப வினாக்களைக்கொண்ட கிரகித்தல் வினா 80% க்கு மேற்பட்ட இலகுதன்மையைக் கொண்டதாகக் காணப்படுவதுடன் குறுவிடை வினாக்களில் 45% என்ற மிகக் குறைந்த இலகுதன்மையைக் காட்டுகின்றது. சுருக்கம் எழுதுதல் வினாவின் இலகுதன்மை 70% க்கு அதிகமாகக் காணப்படுகின்ற அதேவேளை கட்டுரை எழுதுதல், நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுதல் ஆகியனவற்றின் இலகுதன்மை குறைந்தளவானதாகவும் காணப்படுகின்றன.

**வரைபு 3.2**

வகுப்பாயிடைக்கு ஏற்ப ஒவ்வொரு வினாவுக்குமான பரீட்சார்த்திகளின் அடைவு





**மூலம் : RD/16/03//OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

இந்தச் சலாகை வரைபின்படி, 4 ஆம் வினாவாகிய கிரகித்தல் வினாவிற்கு 65%க்கு மேற்பட்ட பரீட்சார்த்திகள் 76%க்கு மேற்பட்ட அடைவினைப் பெற்றுள்ளனர். இதற்குக் காரணம், கிரகித்தல் தொடர்பான தெளிவான அறிவு பரீட்சார்த்திகளிடம் காணப்பட்டமையேயாகும். அத்துடன் 1 ஆம் வினாவில் சுமார் 6% ஆன பரீட்சார்த்திகளே 76% இற்கு மேற்பட்ட அடைவினைப் பெற்றுள்ளனர். அத்துடன் 25% ஆன பரீட்சார்த்திகள் 25% இற்கும் குறைவான அடைவினைப் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். ஏனெனில் மொழிவளம், இலக்கணம் மற்றும் நடைமுறை சார்ந்த விடயங்களில் பரீட்சார்த்திகளுக்குப் போதிய தெளிவின்மை காணப்பட்டமையாகும்.

**வரைபு 3.3**

வினாப்பத்திரம் II இன் வினாக்களுக்கான இலகுதன்மைச்சுட்டிகள்




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

## 3.3 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் II இற்கான வினாக்கள் தொடர்பான விசேட அவதானிப்புகளும் ஆலோசனைகளும்

### 3.3.1 வினா இலக்கம் 1 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

### பகுதி II

I. சுருக்கமான விடை எழுதுக.

(i) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
'பூட்டித் திறந்தெடுக்கும் பொருள்'

பூட்டி + திறந்து + எடுக்கும் + பொருள்

(ii) 'அக்காலத்து சட்ட நிபுணர்களுள்ளே தலைசிறந்தவர் அவர்'
- இந்த வாக்கியத்தின் எழுவாய், பயனிலைகளைக் குறிப்பிடுக.

எழுவாய் : அவர்

பயனிலை : தலைசிறந்தவர்

(iii) பின்வரும் பேச்சுவழக்குத் தொடரை எழுத்து வழக்கில் தருக.
'ஏன் மேனே, நீ உன்ரை மச்சாளிடம் பேசிறாயில்லையாம்.'

ஏன் மகனே, நீ உன்னுடைய /உனது/ உன் மச்சாளிடம் பேசுகிறாய் / பேசுகின்றாய் இல்லையாம்.

(iv) 'உதைபந்தாட்டப் போட்டியில் மாணவர்கள் வெற்றி பெற்றனர்'
'மாணவர்களை அதிபர் பாராட்டினார்'
மேற்படி இரண்டு வாக்கியங்களையும் இணைத்து ஒரே வாக்கியமாக எழுதுக.

உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களை அதிபர் பாராட்டினார்.

(v) 'வருந்தினேன்' என்ற தன்வினையின் பிறவினை வடிவம் யாது?

வருத்தினேன் / வருத்துவித்தேன்

(vi) 'பருந்துகள் கூட்டம் உயர உயரப் பறந்தன'
- இவ்வாக்கியத்தை வழு நீக்கி எழுதுக.

பருந்துகள் கூட்டம் உயர உயரப் பறந்தது / பருந்துக்கூட்டம் உயர உயரப் பறந்தது.

(vii) 'கூடு' என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்க வகையில் ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

பெயர் : பறவை கூடு கட்டியது

வினை : அங்கே கூட்டம் கூடியது / கூடி வாழ்ந்தால் கோடி நன்மை /
கடின உழைப்பால் அவனது வருமானம் கூடியது

(viii) பின்வரும் வாக்கியத்தைப் பொருத்தமான நிறுத்தக்குறிகளுடன் எழுதுக.
நீயுமா புருட்டஸ் என்றான் யூலிய சீசர்

"நீயுமா புருட்டஸ்? " என்றான் யூலிய சீசர்.

(ix) பின்வரும் வாக்கியத்தை அதில் உள்ள எழுத்து வழுக்களை நீக்கி, சரியாக எழுதுக.
'சமுகங்களுக்கு இடையில் முரன்பாடு ஏற்படுவது நல்லதல்ல'

சமூகங்களுக்கு இடையில் முரண்பாடு ஏற்படுவது நல்லதல்ல.

(x) 'நேர்காணல்' என்ற சொல்லுக்கு நிகராக வழங்கும் வேறு ஒரு சொல்லைத் தருக.


பேட்டி /செவ்வி / நேர்முகம்

(02 x 10 = 20 புள்ளிகள்

### 3.3.2 வினா இலக்கம் 1 இற்கான பகுப்பாய்வு

**வரைபு 3.4**

வினா இல. 1 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்




முதலாம் வினா கட்டாயமாக விடையளிக்கவேண்டிய வினா ஆகும். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 20 ஆகும். இதில்,

00 - 05 வரையான புள்ளிப்பரம்பலில் 23% ஆனோரும்

06 - 10 வரையான புள்ளிப்பரம்பலில் 42% ஆனோரும்

11 - 15 வரையான புள்ளிப்பரம்பலில் 28% ஆனோரும்


16 - 20 வரையான புள்ளிப்பரம்பலில் 7% ஆனோரும்

புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.இவ்வினாவிற்கு 35% ஆனோரே 10 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்கும் அதே வேளை 65% ஆனோர் 10 அல்லது அதற்கும் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

**மூலம் : RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

**வரைபு 3.5**

1 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிகள்




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

வினாப்பத்திரம் 2 இன் 10 குறுவிடை வினாக்களை உள்ளடக்கிய 1 ஆம் வினாவின் (i) ஆம் உப வினா மிகக் கூடுதலான இலகுதன்மை உடையதாகவும் (ii), (vii), (ix) ஆகிய வினாக்கள் இலகுதன்மை கூடியனவாகவும் (iv), (v), (viii), (x) ஆகிய வினாக்கள் இலகுதன்மை குறைந்தனவாகவும் காணப்படுகின்றன.

இலக்கணப் பகுதிகளில் வரும் வினாக்களுக்கு விடையெழுதுவதற்குப் பரீட்சார்த்திகளில் பெரும்பாலானவர்கள் இடர்படுவதை அவதானிக்க முடிகின்றது. பேச்சுவழக்கு வாக்கியத்தை எழுத்துவழக்கு வாக்கியமாக மாற்றும்போது வினைமுற்றைச் சரியாக மாற்றுவதில் இடர்ப்படுகின்றனர். வாக்கிய இணைப்பின்போது வாக்கிய ஒழுங்கை மாற்றிஇணைக்கும் முறையைச் சரியாகப் புரிந்துகொள்ளாமை, தன்வினை வடிவத்தை பிறவினை வடித்தில் மாற்றுவதில் இடர்படுகின்றமை, வாக்கியவழு நீக்கி எழுதுதலின்போது எழுவாய், பயனிலை இயைபு தொடர்பாகக் கவனத்தில் கொள்ளாமை என்பனவும் அவதானிக்கப்பட்டுள்ளன. பெயராகவும் வினையாகவும் வாக்கியம் அமைக்கும்போது பெயருக்குரிய வாக்கியம், வினைக்குரிய வாக்கியம் எது என்பதைத் தெளிவாக எழுதாமை, நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்துவதில் போதிய தெளிவின்மை, கலைச்சொற்கள்பற்றிய போதிய அறிவின்மை ஆகியவற்றையும் அவதானிக்க முடிகின்றது.

தமிழ்மொழியும் இலக்கியமும் தரம் 10, 11 பாடநூல்களில் உள்ள இலக்கணப் பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கற்பிப்பதன்மூலம் அடைவுமட்டத்தை அதிகரிக்கச் செய்யமுடியும். அத்துடன் செய்யுள்களைக் கற்பிக்கும்போது செய்யுள்களில் இடம்பெறும் தன்வினை, பிறவினை முதலிய இலக்கணப் பகுதிகளை எடுத்துக்காட்டி அவை தொடர்பான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் இவ்விடயத்தில் தெளிவேற்படுவதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

பேச்சுவழக்கு வாக்கியத்தை, எழுத்துவழக்கு வாக்கியமாக மாற்றும்போது வினைமுற்றுச் சொல் காட்டும் காலத்திலேயே வாக்கியம் இடம்பெறல் வேண்டும் என்பதை தெளிவுபடுத்திப் பயிற்சியளிப்பதன்மூலம் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கச் செய்யமுடியும். அத்துடன் இலக்கியப்பகுதியில் இடம்பெறும் பேச்சுவழக்கு வாக்கியங்களைச் சேகரித்து அட்டவணைப்படுத்தி அவற்றை எழுத்துவழக்கில் எழுதும் பயிற்சிகள் வழங்கப்படல் வேண்டும்.

வழுக்கள்பற்றிய தெளிவான விளக்கங்களை அளிப்பதோடு வழுவுள்ள வாக்கியங்களை வழுநீக்கி எழுதப் பயிற்சியளித்தல் மற்றும் ஒரு வினாவில் ஒன்றுக்கு மேற்பட்ட பகுதிகள் இருக்கும்போது (உதாரணமாக, பெயராகவும் வினையாகவும் வரத்தக்க வகையில் வாக்கியம் அமைத்தல்) பெயர், வினை என்பவற்றிற்குரிய வகையில் இரு வாக்கியங்களாக எழுதுவதற்கான பயிற்சிகளை வழங்குதலானது அடைவு மட்டத்தை அதிகரிக்கச் செய்யும்.

### 3.3.3 வினா இலக்கம் 2 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

**2.** பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவுசெய்து, ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான **தலையங்கம்** இடுக.

(i) உணவு, மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்று. எல்லாத் தரப்பினருக்கும் அது தாராளமாகக் கிடைக்க வேண்டும். உணவு உற்பத்தி பெருகும்போதே அது சாத்தியமாகும். ஆகையால் அரசாங்கமும் சமூக அமைப்புகளும் தனி மனிதர் ஒவ்வொருவரும் இயலுமானவரையில் உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கு உழைப்பது இன்றியமையாத கடமையாகும். இந்த விடயங்களை வலியுறுத்துவதான ஒரு **விளக்கக் கட்டுரை**.

(ii) இன்று பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள நமது நாடு அதிலிருந்து மீள்வதற்கு வெளிநாட்டு உதவிகளை எதிர்பார்ப்பதை விட உள்நாட்டு வருமானத்தைப் பெருக்குவதே சிறந்த வழியாகும். எமது நாட்டைப் பொறுத்தவரையில் வருமானத்தைப் பெருக்குவதற்கு சுற்றுலாத்துறை மிகவும் வாய்ப்பானதாகும். அத்துறையின் விருத்திக்கு ஏற்ற பல்வேறு வழிவகைகளையும் கண்டறிந்து அவற்றை மேம்படுத்துவதோடு சுற்றுலாப் பயணிகள் விரும்பி வரத்தக்க சூழ்நிலையை நாட்டில் ஏற்படுத்திக் கொள்வதும் அவசியாமாகும். இவ்வாறான விடயங்களை வலியுறுத்தும் ஒரு **மேடைப்பேச்சு.**

(iii) ஒழுக்கம் இல்லாத வாழ்க்கை அர்த்தமற்றது, பாடசாலைகள் மாணவர்களுக்கு பாடங்களைப் போதிப்பதோடு ஒழுக்க விழுமியங்களையும் வலியுறுத்த வேண்டியது அவசியமாகும் எனக் கருதும் ஒருவருக்கும், பெருந்தொகையான மாணவர்கள் காணப்படும் நிலையில் பாடசாலைகளில் கல்வி, ஒழுக்கம் இரண்டையும் போதிப்பது இயலாது, மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு பெற்றோர்களுக்கே உரியது எனக் கருதும் ஒருவருக்கும் இடையிலான **உரையாடல்.**

(iv) கல்வியை விட, செல்வத்தை விட நேர்மையே பெரிது என்று சிறுவயது முதலே கருதி வளர்ந்த அவன், படித்துப் பட்டம் பெற்று உயர் பதவியில் அமர்ந்தான். எந்த நிலையிலும் அவன் நேர்மை தவறியதில்லை. நேர்மைக்கு மாறான செயல் ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற அழுத்தம் ஒன்று, இன்று உயர்மட்டத்திலிருந்து அவனுக்குக் கொடுக்கப்படுகிறது. எந்த இழப்பை எதிர்கொண்டு என்றாலும் நேர்மையைக் காப்பேன் எனத் துணிந்தான் அவன்... இதனை அடிப்படையாகக் கொண்ட ஒரு **சிறுகதை**.

(25 புள்ளிகள்)

(i)

மாதிரித் தலைப்புகள் : உணவு உற்பத்தியும் நாட்டின் தன்னிறைவும்
பசியற்ற நாட்டைக் கட்டியெழுப்புவோம் (இவை போன்றன)

- உணவின் இன்றியமையாமை பற்றிய விளக்கம்
- சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு அப்பாற்பட்டு உணவு தேவைப்படல்
- உணவுத் தேவைக்கு இறக்குமதியை நம்பியிருப்பதால் அந்நியச்செலாவணி அதிகரித்தலின் தீமை
- அதனைத் தவிர்ப்பதற்காக அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய பணிகள்
  - விவசாயிகளுக்கு மானியம் வழங்கல்
  - விவசாயத் துறையை நவீனமயப்படுத்தல்
  - உணவைப் பாதுகாப்பாகப் பேணுதல்
  - விவசாயக் கல்வியை மேம்படுத்தல்

- சமூக நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள்
  - விவசாயத்தை ஊக்குவிக்கும் பிரசாரங்களை மேற்கொள்ளல்
  - விவசாய ஊக்குவிப்புச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்
  - சிறந்த விவசாய உற்பத்தி முயற்சிகளுக்கு விருது வழங்கல்
- தனிமனிதர் பணிகள்
  - விவசாயத் துறையில் கவனம் செலுத்துதல்
  - வீட்டுத்தோட்டம் அமைத்தல்
  - உள்நாட்டு உற்பத்திகளை நுகர்தல்

(ii)

மாதிரித் தலைப்புகள் : சுற்றுலாத்துறையும் தேசிய அபிவிருத்தியும்
தேசிய அபிவிருத்தியில் சுற்றுலாத்துறையின் பங்கு (இவை போன்றன)

- சுற்றுலாத்துறை பற்றிய அறிமுகம்
- அதனால் எமக்குக் கிடைக்கும் நன்மைகள்
- இனமுரண்பாடற்ற சமாதானமான நாட்டைக் கட்டியெழுப்புதல்
- சுற்றுலா மையங்களை அமைத்தல், அபிவிருத்தி செய்தல்
- எமது நாட்டு சுற்றுலா மையங்களை வெளிநாட்டவருக்கு பிரபல்யப்படுத்தல் (சமூக வலைத்தளங்கள்)
- உள்நாட்டு சுற்றுலாத் துறையை மேம்படுத்தல்
- சுற்றுலாப் பயணிகளுக்கான பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்துவதோடு, நம்பிக்கையையும் ஏற்படுத்துதல்
- சுற்றுலாத்துறை சார்ந்த எமது நாட்டுப் பணியாளர்களைப் பயிற்றுவித்தல்
- துறைசார் அறிவும் அனுபவமும் மிக்க வழிகாட்டிகளை நியமனம் செய்தல்
- போக்குவரத்து, தங்குமிட வசதிகளை சிறப்பானதாகவும் நவீனமயமானதாகவும் அமைத்தல்
- எமது நாட்டு உற்பத்திகளை வெளிநாட்டவர்க்கு பிரபல்யப்படுத்துவதன் மூலம் அந்நியச்செலாவணியை அதிகரித்தல்
- பருவகால நிகழ்வுகள் தொடர்பில் உல்லாசப் பயணிகளை ஊக்குவித்தல் (ஸ்ரீபாத யாத்திரை, கதிர்காமத் திருவிழா)
- சுற்றுலாத்துறை தொடர்பான சகல நடவடிக்கைகளையும் சுற்றுலாத்துறை அமைச்சின்மூலமும், சுற்றுலாப் பணியகம் மூலமும் நெறிப்படுத்தல்
- சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய சுற்றுலா தொடர்பான புதிய நிகழ்ச்சித் திட்டங்களை அமைத்தல் (விளையாட்டு, கேளிக்கைகள்)
- இன்றைய சூழலில் எமது நாடு அந்நியச்செலாவணியைப் பெற்றுக்கொள்ளவதில் சுற்றுலாத்துறையின் இன்றியமையாமை

**குறிப்பு : மேடைப்பேச்சு வடிவம் பேணப்பட வேண்டும்.**

(iii)

மாதிரித் தலைப்புகள்

- ஒழுக்கம் விழுப்பம் தரும்
- ஒழுக்க மேம்பாட்டில் சமுதாயத்தின் பங்களிப்பு (இவை போன்றன)

பாடசாலைகள் ஒழுக்க விழுமியங்களை வழங்குவதில் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்

– கலைத்திட்டத்தினூடாக ஒழுக்க விழுமியங்களை வழங்குதல்
– ஆசிரியர்கள் ஆலோசனை வழங்கலும் வழிகாட்டலும்
– பாடசாலைக்குள்ளேயும் வெளியேயும் மாணவர்களைக் கண்காணித்தல்
– ஆசிரியர்கள் முன்மாதிரியாக நடந்துகொள்ளல்
– இணைப்பாடவிதானச் செயற்பாடுகளினூடாக ஒழுக்க விழுமியங்களைப் பேணுதல் (விளையாட்டுப்போட்டி, சாரணியம்)
– விழிப்புணர்வுத் திட்டங்களை மேற்கொள்ளல்
– முன்மாதிரியான மாணவர்களைப் பாராட்டுதல்
– தலைமைத்துவப் பயிற்சி மற்றும் வேலைக்கான பொறுப்புக்களை அளித்தல்
– சமயநிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்

பெற்றோர் ஒழுக்க விழுமியங்களை வழங்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

– பிள்ளைகள் அதிகமான நேரம் பெற்றோருடன் இருப்பதால் பெற்றோரின் பங்களிப்பு அதிகம்
– வீடுகளில் நல்ல பழக்கவழக்கங்கங்களைப் போதித்தல், பெற்றோர் முன்மாதிரியாக நடந்துகொள்ளல்
– பிள்ளைகளிடம் தினமும் உரையாடுதல், விருப்பு வெறுப்புக்களைக் கேட்டறிதல்
– பெற்றோர் பிள்ளைகளிடம் அன்பு காட்டுதல், கண்டித்தல்
– எதிர்காலத்துக்கான நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்துக் கொடுத்தல்

**குறிப்பு : உரையாடல் வடிவம் பேணப்படல் வேண்டும்.**

(iv)

மாதிரித் தலைப்புகள்

– இலட்சிய வாழ்வு
– நேர்மையே வெற்றி தரும்
– சத்திய சோதனை (இவை போன்றன)

❖ சிறுகதைக்குரிய அமைப்புப் பேணப்படல்

❖ வழங்கப்பட்ட கருப்பொருளுக்கமைய கற்பனைச் செறிவுடன் எழுதுதல்

❖ கதையை சுவைபடவும் விறுவிறுப்பாகவும் யதார்த்தப்போக்கிலும் நகர்த்திச் செல்லுதல்

❖ கதைக்குப் பொருத்தமான மொழிநடையைக் கையாளுதல்


❖ படிப்பினையை மறைமுகமாக முன்வைத்தல்

❖ பொருத்தமான முடிவு **(25 புள்ளிகள்)**

### 3.3.4 வினா இலக்கம் 2 இற்கான பகுப்பாய்வு

**வரைபு 3.6**

வினா இல. 2 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்




2 ஆம் வினா கட்டாய வினாவாக அமைந்ததால் சகல மாணவர்களும் இவ்வினாவுக்கு விடையளித்துள்ளனர். இவ்வினாவுக்கு வழங்கப்படும் மொத்தப் புள்ளிகள் 25 ஆகும். இதில்,

00–06 வரையான புள்ளிப்பரம்பலில் 09% ஆனோரும்

07–12 வரையான புள்ளிப்பரம்பலில் 27% ஆனோரும்

13–18 வரையான புள்ளிப்பரம்பலில் 49% ஆனோரும்


19–25 வரையான புள்ளிப்பரம்பலில் 15% ஆனோரும்

புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ்வினாவிற்கு 64% ஆனோர் 12 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்கும் அதேவேளை 36% ஆனோர் 12 அல்லது அதற்கும் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**மூலம் : RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

**வரைபு 3.7**

2 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிகள்




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

மேடைப்பேச்சு, சிறுகதை என்பவற்றை தெரிவு செய்த பரீட்சார்த்திகள் குறைந்த அடைவினைப் பெற்றுள்ளனர். மேடைப்பேச்சு, உரையாடல், சிறுகதை என்பவற்றை எழுதுவதில் மாணவரிடம் போதிய பயிற்சி இருக்கவில்லை. கட்டுரையில் கொடுக்கப்பட்ட வழிகாட்டல் குறிப்புகளை அனுசரித்து கட்டுரை எழுதப்படவில்லை. மொழிச்செம்மை திருப்திகரமாக அமையவில்லை. பொருத்தமான இடங்களில் பழமொழி, உவமை, மேற்கோள் போன்றவற்றைக் கையாண்டு கட்டுரை எழுதப்படவில்லை. கட்டுரை அமைப்பு முழுமையாகப் பேணப்படவில்லை. உரிய இடங்களில் பொருத்தமான நிறுத்தக்குறிகள் இடப்படவில்லை. பந்திகள் ஆரம்பிக்கும் இடங்கள் ஒழுங்கற்றுக் காணப்பட்டன. பந்திகளுக்கிடையில் இடைவெளிகள் விடப்பட்டிருந்தன. தலைப்பு அதிக சொற்களில் எழுதப்பட்டிருந்தமை போன்ற பல்வேறு விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

கட்டுரையில் கொடுக்கப்பட்ட வழிகாட்டல் குறிப்புகளை வாசித்து, விளங்கிக்கொண்டு அவற்றுக்கேற்றவாறு கட்டுரை எழுத வழிப்படுத்துதல், ஆசிரியர்கள் வகுப்புகளில் வழங்கும் கட்டுரைகளிலும் தலைப்பினை கொடுக்காது வழிகாட்டல் குறிப்புகளை வழங்கி கட்டுரை எழுத வழிப்படுத்துதல், சட்டகம் அமைத்து கட்டுரை எழுதும் பயிற்சிகளை வழங்குதல், ஒரு விடயம் பற்றி ஒரு பந்தியில் விரித்து எழுதப் பழக்குதல் போன்றவை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவைகளாகும்.

உரையாடல், மேடைப்பேச்சு என்பவற்றை எழுதும்போது கவனிக்கவேண்டிய விடயங்கள் தொடர்பாகப் பயிற்சியளித்தல், சிறுகதைகளில் பாத்திர உரையாடல்களை முறையாக எழுதப் பயிற்சியளித்தல். தலைப்பை கவர்ச்சியாகவும் சுருக்கமாகவும் எழுதுவதற்குப் பயிற்சி வழங்குதல். எழுதப்பட்ட கட்டுரைகள் திருத்தப்பட்டு பின்னூட்டல்கள் வழங்கப்படல் என்பன மேற்கொள்ளப்பட வேண்டியவைகளாகும்.

### 3.3.5 வினா இலக்கம் 3 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

**3.** பின்வரும் உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

விஞ்ஞானம் மிகச் சிறந்த அறிவியற் கலையாகும். இதனை உலகம் பல வகைகளிலும் பயன்படுத்தி வருகின்றது. போக்குவரத்துச் சாதனங்களில் விஞ்ஞானம் புதுமை காண உதவியுள்ளது. இசையும், நாடகமும் பலருக்கும் பயன்படும்படியாக வானொலி, தொலைக்காட்சி முதலிய கருவிகளை விஞ்ஞானம் படைத்துள்ளது. உலகின் இயல்புகளையும் பிரபஞ்சத்தின் இரகசியங்களையும் அறியவல்ல செய்மதிகளை அது தந்துள்ளது.

இவ்வாறு அறிவும் கலைகளும் உலகெங்கும் பரவ உதவுகின்ற விஞ்ஞானமே மக்களைப் பேரழிவுக்குள் தள்ளிவிடும் பெரும் போர்களுக்கும் காரணமாக உள்ளது. வேலும் வாளும் கொண்டு எவரேனும் போர் செய்து மடிவாரானால், உலகம் இவ்வளவு கலங்கவேண்டியிராது. ஆனால், விஞ்ஞானம் தோற்றுவித்துள்ள அதிநவீன ஆயுதங்களும், அணுகுண்டுகளும், விமானங்களும், நச்சுப் புகைகளும் அனைத்துலக மக்களையும் இரவும் பகலும் நடுங்கச் செய்கின்றன.

மக்கள் உயிர்களைப் பறிப்பதில் முன்னின்று அழிவு செய்யும் விஞ்ஞானம் மக்களைக் காப்பதற்கு உதவி செய்கின்றதா எனவும் எண்ணுதல் வேண்டும். பெரிய வைத்தியசாலைகளுக்குச் சென்று சுற்றிப் பார்த்தால் விஞ்ஞானத்தின் உதவியை உணரமுடியும். அறுவைச் சிகிச்சைக் கருவிகள், நோய்வலியைக் குறைப்பதற்கான மாத்திரைகள், நோய் கண்டறியும் கருவிகள் முதலிய பலவற்றால் விஞ்ஞானம் செய்துள்ள அரிய சுகாதாரப் பணிகளைக் காண்கின்றோம். இவை விஞ்ஞானத்தின் முற்போக்கைப் பறைசாற்றுகின்றன.

ஆயினும் பயன் என்ன? சமுதாயத்தில் விஞ்ஞானம் அமைதியையும் மகிழ்ச்சியையும் விளைக்கிறதா? இல்லையே! விஞ்ஞானத்தை விடவும் விழுமிய மெய்யுணர்வே உலகத்துக்கு அவசியமாகும். அதுவே மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தும்; மகிழ்ச்சியை விதைக்கும்.

(10 புள்ளிகள்)

- **அறிவியற் கலையாகிய விஞ்ஞானத்தை உலகம் பல வழிகளிலும் பயன்படுத்தி வருகின்றமை.**
- **அறிவும் கலைகளும் பரவ உதவும் விஞ்ஞானம் பேரழிவை உண்டாக்குவதற்கும் காரணமாகின்றமை**
- **இவ்வாறு அழிவுக்குக் காரணமாக விளங்கும் விஞ்ஞானம், அரிய மருத்துவப் பணிகளைச் செய்வதன் மூலம் உயிர்களைக் காக்கின்றமை**
- **இத்தகைய விஞ்ஞானத்தால் கிடைக்காத மன அமைதியும் மகிழ்ச்சியும் மெய்யுணர்வால் கிடைக்கப்பெறுகின்றமை**


| | | |
|---|---|---|
| **விடய உள்ளடக்கம்** | **-** | **06 புள்ளிகள்** |
| **சொல்லளவு** | **-** | **02 புள்ளிகள்** |
| **மொழிநடை** | **-** | **02 புள்ளிகள்** |

- 40 - 45 சொற்களுக்குள் இருத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.
- 35 - 50 சொற்கள் வரை ஏற்றுக் கொள்ளப்படும்.
- 35 சொற்களுக்குக் குறைவாகவோ 50 சொற்களுக்குக் கூடுதலாகவோ இருந்தால் சொல்லளவிற்கான ஒரு புள்ளியைக் குறைக்கவும்.
- சொல்லளவு 50 ற்கு மேற்படின் 50 சொற்களை எல்லையாகக் கொண்டு அதற்குள் எழுதப்பட்ட விடயங்களை அனுசரித்துப் புள்ளிகளை வழங்கவும்.
- சொல்லளவு 35 ற்கு குறைவாக இருப்பின் பிரதான கருத்தின் சாராம்சங்களை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகளை வழங்கவும்.
- சொற்களை எண்ணும்போது நிதானமாகக் கணக்கிடவும்.

### 3.3.6 வினா இலக்கம் 3 இற்கான பகுப்பாய்வு

**வரைபு 3.8**

வினா இல. 3 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்




3 ஆம் வினா கட்டாய வினாவாகும். இவ்வினாவுக்கு வழங்கப்படும் மொத்தப் புள்ளிகள் 10 ஆகும். இதில்,

00–02 வரையான புள்ளிப்பரம்பலில் 5% ஆனோரும்

03–05 வரையான புள்ளிப்பரம்பலில் 21% ஆனோரும்

06–07 வரையான புள்ளிப்பரம்பலில் 40% ஆனோரும்


08–10 வரையான புள்ளிப்பரம்பலில் 34% ஆனோரும்

புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ்வினாவிற்கு 05 அல்லது அதற்கும் குறைவான புள்ளிகளைப் பெற்றவர்கள் 26% ஆக இருக்கும் அதேவேளை 5 இற்கு மேற்பட்ட புள்ளிகளை 74% ஆனோர் பெற்றுள்ளனர்.

**மூலம் : RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

**வரைபு 3.9**

3 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிகள்




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

இவ்வினாவிற்கு அதிகளவான பரிட்சார்த்திகள் அதிகளவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். விடய உள்ளடக்கத்திற்கு 6 புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான இலகுதன்மை 59% ஆகும். சொல்லளவு, மொழிநடை என்பவற்றுக்கு தலா இரு புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுக்கான இலகுதன்மைகள் முறையே 86%, 71% ஆக உள்ளன.

பந்தியை கிரகித்து மையக்கருத்து, துணைக்கருத்து என்பவற்றை இனங்காணத் தவறியமை, சொந்த மொழிநடையில் எழுதாது பந்தியில் தரப்பட்ட வாக்கியங்களைத் திரும்பவும் எழுதியமை, சுருக்கத்தில் தவிர்க்கவேண்டிய விடயங்கள் தொடர்பாகக் கவனத்தில் கொள்ளாமை, உரைப்பகுதியில் இடம்பெற்ற முக்கியமான கருத்துக்கள் சுருக்கத்தில் விடுபட்டமை, கருத்துக்கள் ஒழுங்கு முறையில் எழுதப்படாமை, கொடுக்கப்பட்ட சொல் அளவை கருத்திற் கொள்ளாமை (சொற்கள் அதிகமாக இருந்தமை) போன்ற குறைபாடுகள் பரிட்சார்த்திகளிடம் காணப்பட்டமையை அவதானிக்க முடிந்தது.

### 3.3.7 வினா இலக்கம் 4 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

4. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

நாகரிகம் எனப்படுவது ஊண், உடை, உறையுள் முதலியவற்றால் அமைவது. சமைத்தல், நெய்தல் வீடமைத்தல் முதலிய தொழில்கள் நாகரிகத்தின் முதற் படிநிலையில் நிகழ்வன. இந்நிலையிலே பொருள் வேட்டையே மக்களது நோக்கமாக அமையும்.

பொருள்களால் இன்பம் பெற முயன்று, அலைந்து அலைந்து வாடிய பின்பு, நாகரிகத்தின் இரண்டாம் படிநிலையை மக்கள் அடைவர். இந்நிலையிலே புலன்கள் வழியாக இன்பம் பெறுவது அவர்கள் நோக்கமாக இருக்கும். இதற்குக் கலைகள் உதவுகின்றன. ஓவியம், சிற்பம் முதலிய கண்ணுக்கினிய கலைகளும் இசை, கதை முதலிய செவிக்கினிய கலைகளும் இவ்விதத்திலே குறிப்பிடத்தக்கன. இங்கு கலையின்பமே மக்கள் நோக்கமாகும்.

கலைகளால் புலன்கள் ஓரளவு மகிழ்ந்ததை அறிந்த மக்கள், புலன்களைக் கடந்தும் மனம் அலைவதை உணர்வர். இம்மனமே அவர்களை மூன்றாம் படிநிலைக்கு அழைத்துவரும். புலனின்பம் சிலவேளைகளில் மட்டும் இன்பம் தருவதை அறிந்த அவர்கள், நிரந்தர இன்பம் பெற விரும்புவர். இதனைத் தர வல்லது அறமே என்பதை ஒரு கட்டத்தில் மக்கள் உணர்ந்து கொள்ளுவர். இப்படிநிலையில் அற இன்பமே மக்கள் நோக்கமாகும். இதனையே "அறத்தான் வருவதே இன்பம்" என்கிறார் திருவள்ளுவர்.

(i) நாகரிகத்தின் முதற் படிநிலையில் மக்களது தொழில்கள் எவை?

(ii) காட்சிக் கலைகளாக இங்கு கூறப்பட்டுள்ளவை யாவை?

(iii) மக்களை மூன்றாம் படிநிலைக்கு அழைத்து வருவது எது?

(iv) கலையின்பமா, அற இன்பமா எது சிறந்தது? காரணம் தருக.

(v) இப்பந்தியை எழுதிய ஆசிரியரின் பிரதான நோக்கம் யாது?

(10 புள்ளிகள்)

(i) சமைத்தல், நெய்தல், வீடமைத்தல்

(ii) ஓவியம், சிற்பம்

(iii) மனம் / புலன்களைக் கடந்து அலையும் மனம்

(iv) - அற இன்பம்

- நிரந்தர இன்பத்தைத் தரவல்லது அறமே. கலையின்பம் சில வேளைகளில் மட்டுமே இன்பம் தரவல்லது.


(v) அறத்தை வலியுறுத்துதல் / அறம்தான் மக்களுக்கு நிரந்தர இன்பத்தைத் தரவல்லது என்ற உண்மையை விளக்குதல்

**(2 x 05 = 10 புள்ளிகள்)**

### 3.3.8 வினா இலக்கம் 4 இற்கான பகுப்பாய்வு

**வரைபு 3.10**

வினா இல. 4 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்




4 ஆம் வினா கட்டாய வினாவாகும். இவ்வினாவுக்கு வழங்கப்படும் மொத்தப் புள்ளிகள் 10 ஆகும். இதில்,

00–02 வரையான புள்ளிப்பரம்பலில் 4 % ஆனோரும்

03–05 வரையான புள்ளிப்பரம்பலில் 9% ஆனோரும்

06–07 வரையான புள்ளிப்பரம்பலில் 20% ஆனோரும்


08–10 வரையான புள்ளிப்பரம்பலில் 67% ஆனோரும்

புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ்வினாவிற்கு 5 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் 87% ஆக இருக்கும் அதேவேளை 05 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளை 13% ஆனோர் பெற்றுள்ளனர்.

**மூலம்** : **RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

**வரைபு 3.11**

4 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிகள்




**மூலம்** : **RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

4 ஆம் வினா 5 உப பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதில், (i), (ii), (iii), (iv), (v) ஆகிய உப பிரிவுகளுக்கான இலகுதன்மைகள் முறையே 97%, 84%, 85%, 80%, 61% ஆக அமைந்துள்ளன. இவ்வினா இலகுதன்மை அதிகமுள்ள வினாவாகும்.

தரப்பட்ட பகுதியைக் கிரகித்து மையக்கருத்து, துணைக்கருத்து என்பவற்றை இனங்காணத் தவறியமை, சுட்டிப்பாக விடையளிக்கமுடியாமை என்பன பரீட்சார்த்திகளிடம் அவதானிக்கப்பட்ட குறைபாடுகளாகும்.

மாதிரி உரைப்பகுதிகளையும் அவற்றுக்கான வினாக்களையும் வழங்கி மாணவர்கள் சரியாக விடையளிக்கப் பயிற்சி வழங்கல், பாடநூலில் இடம்பெறும் கட்டுரைப்பகுதிகளை கற்பிக்கும் போது, கட்டுரையாசிரியர் கூறவந்த விடயம், மையக்கருத்து, துணைக்கருத்து என்பவற்றை கண்டறியப் பயிற்சிகளை வழங்கல், கிரகித்தல் திறனை வளர்ப்பதற்கேற்ப மேலதிக வாசிப்பைத் தூண்டுதல், வினாக்களுக்குச் சுட்டிப்பாக விடையளிப்பதற்கு ஏற்ப பயிற்சிகளை வழங்குதல் ஆகியன ஆலோசனைகளாக வழங்கப்படுகின்றன.

### 3.3.9 வினா இலக்கம் 5 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

**5.** உதயபுரம், விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்ட மக்கள் வாழும் ஒரு குக்கிராமமாகும். விவசாயம் செய்வதற்குப் போதுமான நீர் வசதி இல்லாமை அக்கிராமம் எதிர்கொள்ளும் பெரும் பிரச்சினையாகும். அக்கிராமத்து விவசாயத்துக்கு ஆதாரமாக உள்ள குளம், மழை இல்லாக் காலங்களில் வற்றிவிடுகின்றது. அக்குளத்தை ஆழப்படுத்திப் புனரமைத்தால் விவசாயம் மேம்பட வழியேற்படும் என்பதைச் சுட்டிக்காட்டி, அதனைப் புனரமைத்துத் தருமாறு வலியுறுத்தி, கிராம முன்னேற்றச் சங்கத்தின் செயலாளர் க.நச்சினார்க்கினியன் என உம்மைக் கருதிக் கொண்டு உமது பிரதேச நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளருக்கு **100** சொற்களில் **கடிதம்** ஒன்று எழுதுக.

**அல்லது**

உதயபுரம் கிராமத்தின் முத்தமிழ் மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. அடுத்த ஆண்டுக்கான புதிய நிருவாகிகள் தெரிவும் அதை அடுத்து புதிய நிருவாகம் நடைமுறைப்படுத்தவுள்ள எதிர்காலத் திட்டங்கள் குறித்த கலந்துரையாடலும் இடம்பெற்றன. இறுதியில் அத்திட்டங்கள் பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முத்தமிழ் மன்றத்தின் செயலாளர் க.நச்சினார்க்கினியன் என உம்மைக் கருதிக்கொண்டு அன்றைய கூட்டம் தொடர்பாக **100** சொற்களில் **அறிக்கை** ஒன்று எழுதுக.

(15 புள்ளிகள்)

**கடிதம்**

**அமைப்பு**

- முகவரி - 01 புள்ளி
- உள்முகவரி - 01 புள்ளி
- விளிப்பு - 01 புள்ளி
- தலைப்பு - 01 புள்ளி
- பதவி, ஒப்பம் - 01 புள்ளி

**05 புள்ளிகள்**

| | | |
|---|---|---|
| **உள்ளடக்கம்** | - | **07 புள்ளிகள்** |
| **மொழிநடை** | - | **03 புள்ளிகள்** |
| **மொத்தம்** | | **15 புள்ளிகள்** |

**(தரப்பட்ட தரவுகளுக்கமைய முகவரி முதலானவை அமைதல் வேண்டும்)**

- விவசாயத்தை ஆதாரமாகக் கொண்ட உதயபுரக் கிராமத்தின் நீர் வசதியின்மையும் அதற்கான காரணமும்
- குளத்தைப் புனரமைப்பதால் விவசாயத் தொழில் அடையும் வளர்ச்சி
- குளத்தை ஆழப்படுத்தி புனரமைத்துத் தரும்படி வேண்டுகோள் விடுத்தல்

**அறிக்கை**

**அமைப்பு**

| | | |
|---|---|---|
| தலைப்பு | - | 01 |
| உபதலைப்புகளில் / பந்திகளில் எழுதுதல் | - | 01 |
| இடம், காலம் | - | 01 |
| பதவி, ஒப்பம் | - | 01 |
| திகதி | - | 01 |

**(05 புள்ளிகள்)**

**(10 புள்ளிகள்)**

**உள்ளடக்கம்**


- புதிய அங்கத்தவர் தெரிவு பற்றிய விபரம்
- புதிய நிர்வாகம் நடைமுறைப்படுத்தவுள்ள திட்டங்கள், தீர்மானங்கள் பற்றிய கலந்துரையாடல்

**(15 புள்ளிகள்)**

### 3.3.10 வினா இலக்கம் 5 இற்கான பகுப்பாய்வு

**வரைபு 3.12**

வினா இல. 5 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்




5 ஆம் வினாவில் கடிதம், அறிக்கை ஆகிய இரு பகுதிகள் உள்ளன. இவற்றில் ஒன்றினைப் பரீட்சார்த்திகள் தெரிவுசெய்து விடையளிக்க வேண்டும். இவ்வினாவுக்கு வழங்கப்படும் மொத்தப் புள்ளிகள் 15 ஆகும். இதில்,

00–03 வரையான புள்ளிப்பரம்பலில் 08% ஆனோரும்

04–07 வரையான புள்ளிப்பரம்பலில் 18% ஆனோரும்

08–11 வரையான புள்ளிப்பரம்பலில் 42% ஆனோரும்


12–15 வரையான புள்ளிப்பரம்பலில் 32% ஆனோரும்

புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ்வினாவிற்கு 8 - 15 புள்ளிகளைப் பெற்றவர்கள் 74% ஆக இருக்கும் அதே வேளை 0-7 புள்ளிகளை 26% ஆனோர் பெற்றுள்ளனர்.

**மூலம் : RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

**வரைபு 3.13**

5 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிகள்




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

கடிதம் எழுதுதல் இலகுதன்மை அதிகமுள்ள வினாவாகக் காணப்படுகின்றது. அமைப்புக்கு 5 புள்ளிகளும் உள்ளடக்கத்துக்கு 7 புள்ளிகளும் மொழிநடைக்கு 3 புள்ளிகளும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுக்கான இலகுதன்மைகள் முறையே 65%, 63%, 65% ஆக உள்ளன. கடிதத்தின் அமைப்பினை விளங்கிச் சரியாகப் பயன்படுத்தத் தவறியமை, உள்முகவரியை இனங்கண்டு ஒழுங்குபடுத்தி எழுதியதில் இடர்ப்பட்டமை, விளிப்புக்குப் பின்னரே தலைப்பிட வேண்டும் என்பதைக் கவனிக்காமை, விளிப்புக்கு பின்பு ஆச்சரியக் குறியைத் தவறாகப் பயன்படுத்தியமை, பதவியை எழுதிய பின்னர் ஒப்பம் இட்டமை என்பன பரீட்சார்த்திகளிடம் காணப்பட்ட குறைபாடுகளாகும்.

கடிதத்தின் மாதிரிச் சட்டகத்தை முன்வைத்து கடித அமைப்பை விளக்குதல், தொழில்முறைக் கடிதம் யாருக்கு எழுதப்படல் வேண்டும் என்பதைச் சரியாக விளங்கி உள்முகவரியைச் சரியாக எழுதவும் பொருத்தமாகத் தலைப்பிடவும் வழிப்படுத்துதல், கடிதத்தின் உள்ளடக்கம் வினாவில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக அமைதல், இதற்காக வழிகாட்டல் குறிப்புக்கள் அடங்கிய கடிதங்களை எழுதும் பயிற்சிகளை வழங்குதல், கடிதங்களின் கருத்துக்கள் ஒழுங்கமைக்கப்பட்டனவாக இருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துதல் என்பன அவசியமாகும்.

அறிக்கை எழுதுதல், இலகுதன்மை மிகவும் குறைந்த, கடினத்தன்மைமிக்க வினாவாக அமைந்துள்ளது. அறிக்கையின் அமைப்புத் தொடர்பாகப் பரிட்சாருத்திகள் இடர்பட்டுள்ளனர் என்பதை அமைப்புக்கு கிடைத்த 22% என்ற இலகுதன்மை எடுத்துக்காட்டுகின்றது. உள்ளடக்கம், மொழிநடை என்பவற்றுக்கான இலகுதன்மைகள் 32%, 33% ஆகக் காணப்படுகின்றன.

பொதுவாகக் குறைந்தளவு மாணவர்களே அறிக்கையினைத் தெரிவுசெய்திருந்தனர். அறிக்கையின் அமைப்பினை விளங்கிச் சரியாகப் பயன்படுத்தத் தவறியமை, வழிகாட்டல் குறிப்பில் உள்ள விடயங்களைப் பின்பற்றி விடை எழுதப்படாமை, எதிர் காலத் திட்டங்கள், அத்திட்டங்கள்பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டமை என்பன குறித்துக் கவனம் செலுத்தப்படாமை என்பன பரீட்சார்த்திகளிடம் காணப்பட்ட குறைபாடுகளாகும்.

அறிக்கை எழுதும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாக மாதிரி அறிக்கை ஒன்றை முன்வைத்து மாணவர்களுக்கு விளக்கமளித்தல், காலம், நேரம், இடம், திகதி, ஒப்பம் ஆகியவற்றைப் பொருத்தமான இடங்களில் எழுதுவதற்கு வழிப்படுத்துதல், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மன்ற அறிக்கைகளை மாணவர்களுக்கு எழுத வழிப்படுத்துதல், வழிகாட்டல் குறிப்புகளை மாணவர்களுக்கு வழங்கி அவற்றை உள்ளடக்கி அறிக்கை எழுதப் பயிற்சியளித்தல், தெளிவாகவும் சுருக்கமாகவும் நிகழ்ச்சி ஒழுங்கின்படியும் அறிக்கை எழுத வழிப்படுத்துதல் என்பன கவனிக்கப்பட வேண்டிய விடயங்களாகும்.

## பகுதி IV

### 4. வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும் - வினாப்பத்திரம் - III

### 4.1 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் III இன் கட்டமைப்பு

### வினாப்பத்திரம் - III

வினாத்தாள் III - 02 மணித்தியாலங்கள்

7 வினாக்களைக் கொண்டது.

மொத்தப் புள்ளிகள் 80 ஆகும்.

1, 2, 3, 4 ஆகிய வினாக்கள் கட்டாயமானவை. வினாக்கள் 5, 6, 7 இல் ஒன்றினைத் தெரிவு செய்தல் வேண்டும்.

வினா இல. **1** : குறுவிடை வினாக்கள் 10. ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 20 ஆகும்.

வினா இல. **2** : விதிக்கப்பட்ட பாடநூலிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட செய்யுள், உரைநடைப்பகுதிகளை உள்ளடக்கிய 5 பகுதிகளைக் கொண்டது. ஒரு வினாவுக்கு 4 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 20 ஆகும்.

வினா இல. **3** : இரண்டு தெரிவு வினாக்களில் ஒன்றுக்கு மாத்திரம் விடை எழுதுதல் வேண்டும். இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 15 ஆகும்.

வினா இல. **4** : இரண்டு தெரிவு வினாக்களில் ஒன்றுக்கு மாத்திரம் விடை எழுதுதல் வேண்டும். இவ்வினாக்குரிய புள்ளிகள் 15 ஆகும்.

வினா இல. **5, 6, 7** : மூன்று தெரிவு வினாக்களில் ஒன்றுக்கு மாத்திரம் விடை எழுதுதல் வேண்டும். இவ்வினாக்குரிய புள்ளிகள் 10 ஆகும்.


| | | | | |
|---|---|---|---|---|
| இறுதிப் புள்ளியைக் கணித்தல் : | வினாப்பத்திரம் I | = 40 | | |
| : | வினாப்பத்திரம் II | = 80 | | |
| : | வினாப்பத்திரம் III | = 80 | | |
| | இறுதிப்புள்ளி | = 200/2 | = | 100 |

**மூலம்** : க.பொ.த (சா/தர) வினாப்பத்திரக் கட்டமைப்பு மற்றும் முன்னோடி வினாக்கள்,2016, இ.ப.தி

## 4.2 வினாப்பத்திரம் III இற்கான பகுப்பாய்வு

**வரைபு 4.1**

வினாப்பத்திரம் III இன் வினாக்களைத் தெரிவுசெய்துள்ள விதமும் அவற்றின் இலகுதன்மையும்




**மூலம் : RD/16/03/OL, RD/16/04/OL** பத்திரங்களின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி


இந்தச் சலாகை வரைப்படத்தின்படி, கட்டாய வினாக்கள் நான்கிற்கும் 87%க்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளனர். இவற்றில் 2 ஆம் 3 ஆம் வினாக்களின் இலகுதன்மை 50%க்கும் மேற்பட்டதாக இருப்பதுடன், 1 ஆம் 4 ஆம் வினாக்களின் இலகுதன்மை சுமார் 40% ஆகக் காணப்படுகின்றது.

தெரிவு வினாக்களாகிய ஐந்தாம், ஆறாம், ஏழாம் வினாக்களை முறையே 87%, 2%, 7% ஆனோர் தெரிவு செய்திருப்பதுடன் அதன் இலகுதன்மை முறையே 62%, 7%, 32% ஆகவும் காணப்படுகின்றன.

எனவே, தெரிவு வினாக்களில் ஒப்பீட்டளவில் நீதிப்பாடலைக் கொண்ட 5 ஆம் வினாவையே அதிக பரீட்சார்த்திகள் தெரிவுசெய்துள்ளனர். காரணம் ஒப்பீட்டளவில் இந்த வினா தரம் 10 இல் உள்ள பகுதியாக இருப்பதனால் மாணவர்களால் இலகுவாகப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தமையினாலாகும். அதேபோன்று ஆறாம் வினாவான தமிழ்ப்பண்பாடு வினாவும், தற்காலக் கவிதை வினாவான ஏழாம் வினாவும் தரம் 11 இன் இறுதிப் பகுதியில் உள்ளமையால் மாணவர்கள் இறுதித் தருணத்தில் இவற்றைக் கற்கத் தவறியிருக்கலாம்.

**வரைபு 4.2**

வகுப்பாயிடைக்கு ஏற்ப ஒவ்வொரு வினாவுக்குமான பரீட்சார்த்திகளின் அடைவு





**மூலம் : RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

இந்த சலாகை வரைபடத்தின்படி, பகுதி III இன் முதலாம் வினாவில் 5%ஆன பரீட்சார்த்திகள் 76% இற்கு மேற்பட்ட அடைவினைப் பெற்றுள்ள போதிலும் 37% ஆன பரீட்சார்த்திகள் 25% இற்கும் குறைவான அடைவினைப் பெற்றுள்ளனர். மேலும் 58%ஆன பரீட்சார்த்திகள் இடைப்பட்ட அடைவுமட்டத்தினைப் பெற்றுள்ளனர். பரீட்சார்த்திகளுக்குச் செய்யுளின் பொருள்பற்றிய மேலதிகத் தெளிவு, விளக்கமின்மையாலும் பாடப்பரப்பிலுள்ள சிறிய சிறிய விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காதிருப்பதினாலுமே 95%ஆன பரீட்சார்த்திகள் 76%க்கும் குறைவான அடைவினைப் பெற்றுள்ளனர்.

முதலாம், நான்காம், ஏழாம் வினாக்களில் 37% ஆன பரீட்சார்த்திகள் 25%க்கும் குறைவான அடைவினைப் பெற்றுள்ளனர். எனினும் ஆறாம் வினாவில் 76%க்கும் மேற்பட்டோர் 25%க்கும் குறைவான அடைவினைப் பெற்றுள்ளனர். ஏனெனில் இலக்கியங்களைக் கற்கும்போது சுவையும், இரசனையும் மற்றும் தெளிவும் இன்றி கற்கப்பட்டமையினாலேயே ஆகும். இரண்டாம் ஐந்தாம் வினாக்களில் சராசரியாக 35% ஆனோர் 76%க்கும் மேற்பட்ட அடைவினைப் பெற்றுள்ளனர். இரண்டாம், மூன்றாம், ஐந்தாம் வினாக்களில் 20%ஆன பரீட்சார்த்திகள் 26% - 50%க்கும் இடைப்பட்ட அடைவினைப் பெற்றுள்ளனர். முதலாம் மூன்றாம், நான்காம், ஐந்தாம், ஏழாம் வினாக்களில் சராசரியாக 20%ஆன பரீட்சார்த்திகள் 51% - 75%க்கும் இடைப்பட்ட அடைவினைப் பெற்றுள்ளனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**வரைபு 4.3**

வினாப்பத்திரம் III இன் வினாக்களுக்கான இலகுதன்மைச்சுட்டிகள்




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு, 2022, இ.ப.தி

## 4.3 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் III இற்கான வினாக்கள் தொடர்பான விசேட அவதானிப்புகளும் ஆலோசனைகளும்

### 4.3.1 வினா இலக்கம் 1 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

**1.** சுருக்கமான விடை தருக.

(i) "எட்டுணையானும் இரவாது தான் ஈதல் எத்துணையும் ஆற்றல் இனிது"

(அ) எட்டுணை என்பதைப் பிரித்து எழுதுக.

(ஆ) எத்துணை என்பதன் பொருள் யாது?

(ii) "பொதிகை வரையினிற் கால் கொண்டு"

(அ) பொதிகை என்பது யாது?

(ஆ) 'கால் கொண்டு' என்பதனை விளக்குக.

(iii) "காவற்பரணில் கண்ணுறங்கும் வேளையிலே கண்ணான மச்சி வந்தென் காலூன்றக் கண்டேனே"

(அ) தலைவியின் முக்கியத்துவத்தை தலைவன் எச்சொல்லால் வெளிப்படுத்துகின்றான்?

(ஆ) இங்கு 'காலூன்றல்' என்பதன் பொருள் யாது?

(iv) "சினிமா மொழி, மொழிபெயர்க்க முடியாத ஒன்று. அது மனித குலத்துக்கே பொதுவானது"

(அ) சினிமா மொழிக்கும் ஏனைய மொழிகளுக்கும் இடையிலான வேறுபாடு யாது?

(ஆ) சினிமா மொழி எந்த மொழி பேசுவோராலும் விளங்கிக் கொள்ளத்தக்கது என்பதை உணர்த்தும் தொடர் யாது?

(v) "தங்கச்சியை வாரிக்கொண்டா. அவட கண்கள் இரண்டும் ததும்பிப் பீறின"

(அ) 'தங்கச்சியை வாரிக்கொண்டா' என்பதன் மூலம் வெளிப்படும் உணர்ச்சி யாது?

(ஆ) தங்கச்சியை வாரிக்கொண்டது யார்?

(vi) "குணக்குன்றாய் உழைத்துண்ணும் குலவிளக்காம் மனிதன்"

(அ) இங்கு மனிதனின் சிறந்த செயலாகக் கூறப்படுவது யாது?

(ஆ) 'குணக்குன்று' என்பது என்ன அணி?

(vii) "மூடருக்கும் பேடருக்கும் முதியோர் மெலியோர்க்குந் தேடருநல் இரத்தினம் போற் தெரிவையரைச் சேர்த்துவரோ?"

(அ) 'பேடர்' எனப்படுபவர் யாவர்?

(ஆ) இங்கு பெண்கள் எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றனர்?

(viii) "மடப்பாவை தன்வரமும்
என்வரமும் வழுவா வண்ணம்
கோடுகின்ற மொழியவன்பால் எனைத் தூது விடுக."

(அ) இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

(ஆ) கோடுகின்ற மொழியவன் யார்?

(ix) "நெறி திறம்பாத் தன்மெய்யை நிற்பதாக்கி இறந்தான் தன் இளந்தேவி"

(அ) 'இளந்தேவி' எனப்படுபவள் யார்?

(ஆ) இங்கு தசரதனுடைய எச்சிறப்பு உணர்த்தப்படுகின்றது?

(x) "யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றும் யாதானும் நாடாமால் ஊராமால் என்றும் கூறுவதற்கு இம் மனப்பான்மை ஊக்கமளித்தது."

(அ) இங்கு சுட்டப்படும் மனப்பான்மை எது?

(ஆ) 'யாதானும் நாடாமால் ஊராமால்' என்ற தொடரை விளக்குக.

(02 × 10 = 20 புள்ளிகள்)

## பகுதி III

1.

(i) அ) எள் + துணை

ஆ) எவ்வளவு / எல்லா வகையிலும்

(ii) அ) ஒரு மலை

ஆ) நிலைபெற்று / படிந்து / தவழ்ந்து

(iii) அ) கண்ணான

ஆ) காலைப் பற்றுதல் / கால்களில் கையை ஊன்றுதல்

(iv) அ) ஏனைய மொழிகளை மொழிபெயர்க்கலாம்; சினிமா மொழியை மொழிபெயர்க்க முடியாது.

ஆ) அது மனித குலத்துக்கே பொதுவானது.

(v) அ) அன்பு / பாசம் / இரக்கம்

ஆ) மூத்தம்மா

(vi) அ) உழைத்துண்ணல்

ஆ) உருவகம்

(vii) அ) துணிவற்றவர் / ஆண்மையற்றவர்

ஆ) கிடைத்தற்கரிய இரத்தினம் போன்றவர்கள்

(viii) அ)
- வீமனால்
- தருமனுக்கு

ஆ) துரியோதனன்

(ix) அ) சுமித்திரை

ஆ) வாய்மை தவறாமை

(x) அ) பரந்த உலக மனப்பான்மை / ஒருலக மனப்பான்மை / உலக மனப்பான்மை


ஆ) எல்லா நாடும் நமது நாடாகும்; எல்லா ஊரும் நமது ஊராகும்.

**(2 x 10 = 20 புள்ளிகள்)**

### 4.3.2 வினா இலக்கம் 1 இற்கான பகுப்பாய்வு

**வரைபு 4.4**

வினா இல. 1 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்




1 ஆம் வினா கட்டாயமாக விடையளிக்க வேண்டிய வினாவாகும். இவ்வினாவுக்கான மொத்தப் புள்ளிகள் 20 ஆகும். இதில்,

00–05 வரையான புள்ளிப்பரம்பலில் 37% ஆனோரும்

06-10 வரையான புள்ளிப்பரம்பலில் 34% ஆனோரும்

11-15 வரையான புள்ளிப்பரம்பலில் 24% ஆனோரும்


16–20 வரையான புள்ளிப்பரம்பலில் 5% ஆனோரும்

புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ்வினாவிற்கு 29% ஆனோர் 10 ற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்கும் அதேவேளை 71% ஆனோர் 10 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

**மூலம் : RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

**வரைபு 4.5**

1 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிகள்




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

III வது பகுதியின் 1 வது வினா 10 குறுவிடை வினாக்களைக் கொண்டது. ஓவ்வொரு குறுவிடை வினாவின் உள்ளும் (அ), (ஆ) என்னும் இரு உப பிரிவுகள் உள்ளன. இலக்கியங்களிலிருந்து ஒரு பகுதி கொடுக்கப்பட்டு, அது தொடர்பாகவே உப பிரிவுகளில் உள்ள இரு வினாக்களும் அமையும்.

வினாப்பத்திரம் III இல் 10 குறுவிடை வினாக்களைக் கொண்ட 1 ஆம் வினாவில் (i) (ஆ), (iii) (ஆ), (iv) (அ), (vii) (அ), (viii) (அ), (ஆ), (x) (அ), (ஆ) ஆகிய வினாக்கள் கடினத்தன்மை உடையனவாக அமைந்துள்ளன. இவற்றின் இலகுத்தன்மைகள் முறையே 9%, 22%, 12%, 28%, 11%, 21%, 31%, 28%, 11% ஆக அமைந்துள்ளன. வினா (i) (ஆ), (iii) (ஆ), (vii) (அ), (x) (ஆ) என்ற உப வினாப்பகுதிகளில் பரீட்சார்த்திகள் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவை அரும்பதங்களால் அமைந்த தொடர்களாகவே உள்ளன. .உதாரணம் : (i) (ஆ) எத்துணை, (iii) (ஆ) காலூன்றல், (viii) (அ) பேடர் என்ற அரும்பதங்களுக்கும் (x) (ஆ) ‘யாதானும் நாடாமல் ஊராமல்’ என்ற தொடருக்கும் பரீட்சார்த்திகளால் விடையளிக்க முடியவில்லை.

பகுதி III இல் மட்டுமன்றி பகுதி I இல் உள்ள முதல் 5 வினாக்கள்கூட அரும்பதத்துடன் தொடர்புடையனவாகவே உள்ளன. எனவே, அரும்பதங்களின் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு வலியுறுத்தி அரும்பதங்களை மாணவர் அறிந்திருக்கவும் விடைகளைத் தெளிவாக முன்வைக்கவும் பயிற்றுவித்தல் வேண்டும்.

### 4.3.3 வினா இலக்கம் 2 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

**2.** பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து, அவற்றின்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்.

(அ) எத்தகையவருடைய நட்பைப் பேணக் கூடாது? ஏன்?

(ஆ) நாயின் நன்றி உணர்வு வெளிப்படுத்தப்படும் விதத்தை விளக்குக.

(ii) பேதைமை என்பதுஒன்று யாதெனில் ஏதம் கொண்டு
ஊதியம் போகவிடல்.

பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கண் செயல்.

(அ) பேதைமை என்பதை வரைவிலக்கணம் செய்க.

(ஆ) 'காதன்மை கையல்லதன்கண் செயல்' என்ற தொடரை விளக்குக.

(iii) நீரெ டுத்து வருதற் கவள்மணி
நித்தி லப்புன் னகைச்சுடர் வீசிடப்
போரெ டுத்து வருமதன் முன்செலப்
போகும் வேளை யதற்குத் தினந்தொறும்
வேரெ டுத்துச் சுதந்திர நற்பயிர்
வீழ்ந்திடச் செய்தல் வேண்டிய மன்னர்தம்
சீரெ டுத்த புலையியற் சாரர்கள்
தேச பக்தர் வரவினைக் காத்தல்போல்

(அ) காதலி நீரெடுக்கச் செல்வதை பாரதியார் விவரிக்குமாற்றை விளக்குக.

(ஆ) காதலிக்காக தான் காத்திருப்பதை விவரிப்பதற்கு பாரதியார் கையாண்ட உவமையை விளக்குக

(iv) பக்குவமாகப் பணியாரம் செய்து பனை நார்ப்பெட்டியில் மூடி மாடாவில் மறைத்து வைத்ததுபோல இவ்வளவு கவனமாக இந்தக் கதையை கோப்பிலே செருகி வைத்தேனே! எங்கே போனது. இறக்கை முளைத்துப் பறந்துவிட்டதா? பனி மூடிய அந்த அதிகாலையிலும் நான் நண்பரைத் தேடிக் கொண்டு ஓடினேன்.

(அ) கோப்பினைப் பாதுகாத்த முறைமையை விளக்குவதற்கு ஆசிரியர் கையாண்ட உவமையில் நீர் காணும் சிறப்பினை விளக்குக.

(ஆ) தொலைந்த கோப்பினைக் கண்டுபிடிப்பதில் அவர் கொண்டிருந்த ஆதங்கம் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?

(v) வாதத்துக்கென்று வந்திருந்தவர்களில் இருந்தவர்கள் இருந்தே விட்டார்கள். எழுந்தவர்கள் வேறு வியாசம் பண்ணிக்கொண்டு வெளியில் போய்விட்டார்கள். போனவர்கள் பின் உள்ளே வரவில்லை. தப்பித்துக்கொள்ள வழிவகைகளின்றித் தம்மை அறியாமலே வாய்குழறி அகப்பட்டுக்கொண்டவர்கள் தமது உடல் நடுங்க நாத் தழுதழுத்து பிறிட்டோ தக்கவர் அல்லர் என்று தாமே சொல்லிச் சமாதானப்பட்டுக் கொண்டார்கள். அன்று நடந்த கூட்ட நிகழ்ச்சியோடு பிறிட்டோவின் பிரதிநிதித்துவக் கதை நின்றுவிட்டது. ஆறுமுக நாவலர் அவர்களின் ஆசீர்வாதத்தால் சேர் பொன். இராமநாதன்துரை அன்று தொடக்கம் அரை நூற்றாண்டுக்கு மேல் இலங்கைச் சட்டசபையில் ஓர் இலங்கைச் சிவப்பாயிருந்து விளங்கினார்.

(அ) பிறிட்டோ சார்பாக வாதிட வந்தவர்களின் இயலாமை எவ்வாறு நயம்பட விவரிக்கப்படுகின்றது?

(ஆ) இலங்கை அரசியலில் சேர் பொன். இராமநாதன் பெற்றிருந்த முக்கியத்துவம் எவ்வாறு விவரிக்கப்படுகின்றது?

($04 \times 5 = 20$ புள்ளிகள்)

(i) அ) - யானையைப் போன்ற குணமுடையவர்களின் நட்பை

- யானை நன்மை செய்தவர்களுக்கும் தீமை செய்யக்கூடியது

ஆ) எஜமானால் ஏவப்பட்ட ஆயுதம் தன் உடம்பில் தைத்திருந்த நிலையிலும் நாய் நன்றியுடையதாய் வாலை ஆட்டி நிற்கும்

(ii) அ) தனக்குக் கெடுதியான செயல்களை ஏற்றுக்கொண்டு நன்மை தரும் செயல்களைக் கைவிடுதல்

ஆ) தனக்குப் பொருந்தாத ஒழுக்கத்தில் ஆசைகொள்ளுதல்

(iii) அ) முத்துப் போன்ற சிரிப்புடன் காண்பவர்களை வசீகரித்தபடி (மன்மதன் முன் செல்ல) செல்லுதல்

ஆ) தேசபக்தர்களைக் கைப்பற்றுவதற்காக ஒற்றர்கள் காத்திருப்பது போல்

(iv) அ)

- "பக்குவமாகப் பணியாரம் செய்து பனைநார்ப்பெட்டியில் மூடி மாடாவில் மறைத்து வைத்ததுபோல்" எனும் உவமை கையாளப்பட்டுள்ளது.
- புதிய தொழில்நுட்பம் சார்ந்த விடயமொன்றைத் தெளிவுபடுத்த ஆசிரியர் கிராமிய வாழ்வியல் அனுபவத்தை உவமையாக்கியிருப்பது.
- உவமை மூலம், பக்குவமாக கோப்பு உருவாக்கப்பட்டமையும் அது கவனமாகப் பேணப்பட்டமையும் சிறப்பாகப் புலப்படுத்தப்பட்டுள்ளது.

ஆ) பனி நிறைந்த அதிகாலைப் பொழுதில் நண்பனைத் தேடி ஓடுதல்

(V) அ)

- இருந்தவர்கள் இருந்தே விட்டார்கள்
- எழுந்தவர்கள் வேறு வியாசம் பண்ணிக்கொண்டு வெளியில் போய்விட்டார்கள்
- அகப்பட்டுக்கொண்டவர்கள் தப்பித்துக்கொள்ள வழிவகையின்றி உடல் நடுங்க நாத் தழுதழுத்து பிறிற்றோ தக்கவர் அல்லர் என்று தமக்குத் தாமே சமாதானப்பட்டனர்

இவ்வாறான வெளிப்பாடுகள் மூலம் விபரிக்கப்படுகிறது.

ஆ) அரை நூற்றாண்டுக்கு மேல் இலங்கைச் சட்டசபையில் ஓர் இலங்கைச் சிவப்பாயிருந்து விளங்கினார் என்று விபரிக்கப்படுகிறது.


**(4 x 5 = 20 புள்ளிகள்)**

### 4.3.4 வினா இலக்கம் 2 இற்கான பகுப்பாய்வு

**வரைபு 4.6**

வினா இல. 2 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்

2 ஆம் வினா கட்டாய வினாவாகும். இதனுள் மூன்று செய்யுள்களும் இரண்டு உரைநடைகளும் உள்ளடங்கியிருக்கும். 2 ஆம் வினாவில் (அ), (ஆ) பகுதிகளைக் கொண்ட 5 உப வினாக்கள் காணப்படும். இவ்வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் 04 x 5= 20 என்ற அடிப்படையில் வழங்கப்படும்.




00–05 வரையான புள்ளிப்பரம்பலில் 15% ஆனோரும்

06-10 வரையான புள்ளிப்பரம்பலில் 21% ஆனோரும்

11-15 வரையான புள்ளிப்பரம்பலில் 30% ஆனோரும்


16–20 வரையான புள்ளிப்பரம்பலில் 34% ஆனோரும்

புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ் வினாவிற்கு 64% ஆனோரே 10 க்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்கும் அதேவேளை 36% ஆனோர் 10 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

**மூலம் : RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

**வரைபு 4.7**

2 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிகள்




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

2 வது வினா 5 பிரிவுகளைக் கொண்டதாகும். ஒவ்வொரு பிரிவுக்கும் (அ), (ஆ) என்ற இரு உப பிரிவுகள் உள்ளன. முதல் 3 பிரிவுகளிலும் செய்யுட்கள் தரப்பட்டு அவை தொடர்பான வினாக்கள் வினவப்படும். (iv), (v) ஆம் பிரிவுகளில் சிறுகதையிலிருந்தும் கட்டுரையிலிருந்தும் ஒவ்வொரு பகுதிகள் தரப்பட்டு அவை தொடர்பான வினாக்கள் வினவப்படும்.

(i) ஆம் வினாவின் இரு உப பிரிவுகளும் (iv) (அ) பிரிவும் (v) ஆம் வினாவின் இரு உப பிரிவுகளும் இலகுதன்மை வாய்ந்தவையாகும். இவற்றின் இலகுதன்மைகள் முறையே 78%, 79%, 67%, 68%, 69% ஆக அமைந்துள்ளன. (ii) ஆம் வினாவின் (ஆ) பிரிவு கடினத்தன்மை உடையதாக உள்ளது. இதன் இலகுதன்மை 40% ஆகும்.

(ii) ஆம் வினாவில் உள்ள திருக்குறள் தொடர்பான வினாக்களுக்கு விடையளிக்க பரீட்சார்த்திகள் இடர்பட்டுள்ளனர். பேதைமை என்பதற்கான வரைவிலக்கணம் தெளிவாகக் கூறப்படவில்லை. ‘‘காதன்மை கையல்லதன்கண் செயல்’’ என்ற தொடரை பரீட்சார்த்திகளால் விளக்க முடியவில்லை. (iii) வது வினா (ஆ) பிரிவுக்கும் மிகக் குறைந்தளவானவர்களே பொருத்தமான விடையை அளித்துள்ளனர். உவமையை இனங்கண்டவர்களும் அதனை விளக்கவில்லை. பிரிவு (iv) இல் (அ) பகுதியில் ஆசிரியர் கையாண்ட உவமையை இனங்கண்ட பரீட்சார்த்திகள் உவமையில் காணும் சிறப்பினைக் குறிப்பிடவில்லை.

பாடல்களின் பொருளை இலகுவாக அறிந்துகொள்வதற்காகச் சந்திபிரித்து, கொண்டுகூட்டி வாசிக்கும் பயிற்சியை வழங்குதல் வேண்டும். அத்துடன் அணிகளை இனங்காண்பதற்கும் அவற்றின் சிறப்பினை விளக்கி எழுதுவதற்கும் பயிற்சிகளை வழங்குதல் வேண்டும்.

## 4.3.5 வினா இலக்கம் 3 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

3. குகப்படலத்தில்,

(அ) குகனது சிறப்பு

(ஆ) கைகேயியின் இழிவு

ஆகியன வெளிப்படுமாற்றினை விவரிக்குக.

**அல்லது**

(அ) 'இனி நினைந்து...' என்னும் **புறநானூற்றுப்** பாடலில் முதியவரின் ஏக்கம்

(ஆ) 'தச்சன் செய்த...' என்னும் **குறுந்தொகைச்** செய்யுளில் காதலியின் பிரிவுத் துயர்

ஆகியன வெளிப்படுத்தப்படுமாற்றினை விளக்குக. (15 புள்ளிகள்)

அ)

- கோசலைக்குக் குகனைப் பரதன் அறிமுகப்படுத்திய பொழுது, இராமனின் தோழனாகவும் தனக்கும் இலக்குவனுக்கும் சத்துருக்கனுக்கும் அண்ணனாகவும் குறிப்பிடுகின்றமை
- 'குன்றனைய திருநெடுந்தோள்' என உடல் வலிமையைப் பாராட்டுகின்றமை
- இராமன் முதலியோர்க்குச் சகோதரனாக குகனைக் கோசலை வாழ்த்துகின்றமை
- 'கைவீரக் களிறு' எனவும் 'காளை' எனவும் அவனது வலிமையைப் போற்றுகின்றமை
- இராமன் காடு சென்றதனால் இத்தகைய வீரனுடைய உறவு கிடைத்தமையையிட்டுக் கோசலை பெருமிதம் அடைகின்றமை
- கைகேயியைப் பரதன் இழித்துக் கூறியபோதும் குகன் அவளை வணங்கியமை
- தன் பிள்ளைகளுக்குச் சமமாக குகனைக் கோசலை மதித்தமை
- வேடுவர்களின் சிறந்த தலைவன்

**(8 புள்ளிகள்)**

ஆ.)

- தன் கணவனான தசரத மன்னனைச் சுடுகாட்டிற்கு அனுப்பியவள்.
- தன் மகன் பரதனைத் துன்பக் கடலில் மூழ்கச் செய்தவள்.
- கருணைக் கடலாகிய இராமன் கொடிய காட்டிற்குச் செல்லக் காரணமானவள்.
- உலகம் முழுவதையும் துன்பத்திற்குள்ளாக்கியவள்.
- பழி வளர்க்கும் செவிலி.
- கைகேயியின் வயிற்றில் பிறந்தமையை இழிவாகப் பரதன் கருதியமை
- இராமனைப் பிரிந்தமையால் உடல்கள் எல்லாம் உயிர் இல்லாதன போலத் தோன்றும் இவ்வுலகில், இவள் ஒருத்தி மட்டுமே துன்பம் இல்லாத முகத்தையுடையவளாக விளங்கியவள்.

**(7 புள்ளிகள்)**

**(8 + 7 = 15 புள்ளிகள்)**

**அல்லது**

அ)

- கழிந்துபோன இளமைக் கால வாழ்வை நினைத்து ஏங்குதல்
    - நீர்நிலைகளில் நீராடுதல்
    - மகளிரோடு கூடி மகிழ்தல்
    - ஒளிவு மறைவற்ற நண்பர்களோடு கூடி விளையாடுதல்
    - துணிவுமிக்க காரியங்களில் ஈடுபடுதல்
- நடக்க முடியாமை, நடுக்கம், இருமல் காரணமாக தொடர்ந்து பேச முடியாமை முதலான இயலாமையுடன்கூடிய முதுமையை நினைத்து வருந்துதல்

**(8 புள்ளிகள்)**

ஆ.)

- தலைவனுடன் கூடி வாழ முடியாமை
- அந்நிலையில் மனதளவில் அவனோடு வாழ்வதாக கற்பனை செய்து இன்புறல்
- பிரிவால் மெலிந்த அவளது உடல் அவளது கற்பனை வாழ்வால் பூரித்தது எனல் (செறிந்தன வளையே)

இவ்வாறாக தலைவியின் பிரிவுத்துயர் பூடகமாக வெளிப்படுத்தப்படுகின்றது


**(7 புள்ளிகள்)**

**(8 + 7 = 15 புள்ளிகள்)**

### 4.3.6 வினா இலக்கம் 3 இற்கான பகுப்பாய்வு

**வரைபு 4.8**

வினா இல. 3 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்




3 ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். எனினும் இதனுள் இரு தெரிவு வினாக்கள் அமைந்துள்ளன. இவ்வினாவுக்குரிய மொத்தப் புள்ளிகள் 15 ஆகும். இதில்,

00 – 03 வரையான புள்ளிப்பரம்பலில் 34% ஆனோரும்

04 - 07 வரையான புள்ளிப்பரம்பலில் 20% ஆனோரும்

08 - 11 வரையான புள்ளிப்பரம்பலில் 25% ஆனோரும்


12–15 வரையான புள்ளிப்பரம்பலில் 21% ஆனோரும்

புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ் வினாவிற்கு 46% ஆனோரே அரைவாசிக்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்கும் அதேவேளை 54% ஆனோர் அரைவா-சிக்கும் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

**மூலம்** : **RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

**வரைபு 4.9**

3 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிச்சுட்டிகள்




**மூலம்** : **RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

3 ஆம் வினா கட்டாய வினாவாகும். இதனுள் இரு தெரிவு வினாக்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றினைத் தெரிவுசெய்து பரீட்சார்த்திகள் விடையளித்தல் வேண்டும். 1 வது பகுதியானது குகப்படலத்தில் குகனது சிறப்பு, கைகேயியின் இழிவு ஆகியன வெளிப்படும் வகை தொடர்பானதாகும். இவ்வினா இலகுதன்மை குறைந்ததாகவே உள்ளது. இவ்வினாவின் (அ), (ஆ) உப பிரிவுகளுக்கான இலகுதன்மைகள் முறையே 45%, 48% ஆக உள்ளன.

3 ஆம் வினாவின் அடுத்த தெரிவுப் பகுதி புறநானூறு, குறுந்தொகைப் பாடல்கள் தொடர்பானவையாகும். இவற்றின் இலகுதன்மைகள் ஒப்பீட்டளவில் 1 ஆம் பிரிவு வினாக்களுக்கான இலகுதன்மைகளை விட அதிகமாக உள்ளன. இவற்றுக்கான இலகுதன்மைகள் முறையே 53%, 52% ஆகக் காணப்படுகின்றன. புறநானூறு, குறுந்தொகைபற்றிய வினாக்களுக்குப் பரீட்சார்த்திகள் பாடலின் பொருளை எழுதியுள்ளனரே தவிர வினாக்களுக்கேற்ப விடையளிக்கவில்லை.

இலக்கியப் பகுதிகளைக் கற்பிக்கும்போது மாணவர்கள் அரும்பதங்களின் பொருளை அறிந்து கொள்ளவும் பாடலின் பொருளை முழுமையாக விளங்கிக்கொள்ளவும் பயிற்சியளிக்கப்படல் வேண்டும். குகப்படலம், சங்கச்செய்யுள் ஆகிய செய்யுட்களைச் சந்திபிரித்து பொருளை விளக்கி மாணவர்களைத் தெளிவுபடுத்த வேண்டும். இலக்கியப் பகுதி வினாக்களுக்கு பொருளை மட்டும் எழுதாமல் வினாவுக்கு ஏற்ற வகையில் விடையை மாற்றி எழுதுவதற்கான பயிற்சிகள் வழங்கப்படல் வேண்டும்.

### 4.3.7 வினா இலக்கம் 4 மற்றும் எதிர்பார்க்கப்படட்ட விடைகள்

**4.** **இலட்சியமும் சமநோக்கும்** என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துக.

(அ) இலட்சியமும் சமநோக்கும் என்பதற்கான விளக்கம்

(ஆ) மணிவாசகர், தருமர், தசரதன் ஆகியோர் தத்தம் இலட்சியத்திற் கொண்ட உறுதிப்பாடு

**அல்லது**

**கம்பியூட்டர்** என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) கதையோட்டத்தில் அரவிந்தன் பாத்திரம் பெறும் முக்கியத்துவம்

(ஆ) ஆசிரியரின் நகைச்சுவை உணர்வு

அ)

- எக்காலத்தும் மக்களை ஈடேற்றுவது இலட்சியமாகும்.
- இது சமூகமாகிய உடலுக்கு உயிராக அமைவது.
- இலட்சியங்களுக்குள்ளே உயர்வு தாழ்வு என்பது இல்லை.
- இலட்சியவாதிகளிலுள்ளேயும் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடு கிடையாது.
- இலட்சியங்களிலும் இலட்சியவாதிகளிலும் சமநோக்கம் கொண்டு, ஒருமைப்பாடு காணப்படுதல் வேண்டும்.
- இலட்சிய வாழ்வில் எத்தனை சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடினும் தான்கொண்ட இலட்சியத்தில் உறுதியாய் நிற்றல் வேண்டும்.

**(7 புள்ளிகள்)**

ஆ)

**மணிவாசகர்**

- இறைவனது திருவருளை இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர்.
- இலட்சியத்தின் பயனைத் தியாகம் செய்து, தொடர்ந்தும் இலட்சியத்தை போற்றி வாழ்ந்தவர்.
- நரகத்தையும் சுவர்க்கத்தையும் சமநோக்கில் கண்டு, இலட்சியத்தில் உறுதி பூண்டு வாழ்ந்தவர்.

**தருமர்**

- அறத்தையே இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர்.
- பிற உயிர்களைத் தம் உயிரில் கண்ட சமநெறிச் செல்வர்.
- தன்னுடன் வந்த புழுத்த நாய்க்குக் கிட்டாத முத்தியுலகம் தனக்கும் வேண்டாம் என இலட்சியத்திற்கான பயனை விடுத்து இலட்சியத்தில் உறுதி கொண்டிருந்தவர்.

**தசரதன்**

- சத்தியத்தை இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர்.
- அரச நீதிப்படி மூத்தவனுக்கு முடிசூட்டுவதா கைகேயிக்குக் கொடுத்த சத்திய வாக்கைக் காப்பாற்றுவதா என இலட்சிய வாழ்வில் இடையூறு ஏற்பட்டபோதும் தன் இலட்சியத்தில் உறுதியாய் நின்றவர்.
- சத்தியத்தை நிலைநிறுத்திவிட்டு இலட்சியத்திற்காக உயிரையே விட்டவர்.

**(8 புள்ளிகள்)**

**(7 + 8 = 15 புள்ளிகள்)**

**அல்லது**

அ)

- கதையின் தொடக்கம், நகர்வு, முடிவு மூன்றிலும் அரவிந்தன் எனும் கதாபாத்திரம் முக்கியம் பெறல்
  - கம்பியூட்டர் வாங்க முன்பே நண்பர்களிடம் வாங்கிவிட்டதாக அரவிந்தன் கூறுதல்
  - 'ஓம் ஸ்ரீராம்' எழுதி கம்பியூட்டரை உபயோகிக்கத் தொடங்குதல்
  - கம்பியூட்டர் அறிவை சுயமாக வளர்த்துக்கொள்ளல்
  - கம்பியூட்டரில் பெற்றோர் பரிச்சயம் பெறுவதற்கு அரவிந்தன் காரணமாதல்
  - கம்பியூட்டர் தொடர்பில் பெற்றோருக்கு ஏற்படும் சிக்கல்களை நீக்க உதவுதல்
  - அரவிந்தனுக்கும் அவனது நண்பர்களுக்கும் இடையேயான தொடர்பு கம்பியூட்டர் மூலமாக மேலும் வலுப்பெறல்
  - கம்பியூட்டரை இலாவகமாகக் கையாளல்
  - கம்பியூட்டருடன் தனது பெரும் பொழுதைக் கழித்தல்
  - தொலைந்துவிட்டது என எண்ணிய கோப்பினை மீளக் கண்டுபிடிக்கக் காரணமாதல்
  - கம்பியூட்டர் மூலம் கல்வி நடவடிக்கை மேற்கொள்ளல்

**(07 புள்ளிகள்)**

ஆ.)

- கம்பியூட்டர் கடையில் ஏற்பட்ட அனுபவம் பற்றிய விபரிப்பு
- கம்பியூட்டரின் தோற்றம் பற்றிய விவரணம்
- கம்பியூட்டர் ஆ,ணா பெண்ணா என்பதைக் கண்டுபிடிப்பது பற்றிய விளக்கம்
- தனக்கும் மனைவிக்கும் கம்பியூட்டர் பற்றிய பரிச்சயமின்மை பற்றிய விபரிப்பு
- கம்பியூட்டர் வாங்குவதைத் தூண்டில் வாங்கிய அனுபவத்தோடு ஒப்பிட்டு விபரித்தல்
- காளமேகத்தின் பாடலோடு தொடர்புபடுத்திய கம்பியூட்டர் பற்றிய விபரிப்பு
- மனைவி கம்பியூட்டரைப் பயன்படுத்தியமை பற்றிய விபரிப்பு
- கம்பியூட்டரின் பல்வகைப் பயன்பாடு பற்றி பாக்குவெட்டி பற்றிய பாடலோடு தொடர்புபடுத்திய விபரிப்பு
- தொலைக்காட்சியில் இலயித்திருந்தமை, அச்சந்தர்ப்பத்தில் கம்பியூட்டரில் தொலைந்த கோப்பு கண்ணுக்குப் புலப்படுதல், அதனைக் கண்டு ஆ,வலோடு பாய்ந்து செல்லல் முதலானவை பற்றிய விபரிப்பு


**(8 புள்ளிகள்)**

**(7 + 8 = 15 புள்ளிகள்)**

#### 4.3.8 வினா இலக்கம் 4 இற்கான பகுப்பாய்வு

**வரைபு 4.10**

வினா இல. 4 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்




4 ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். எனினும் இதனுள் இரு தெரிவு வினாக்கள் அமைந்துள்ளன. இவ்வினாவுக்குரிய மொத்தப் புள்ளிகள் 15 ஆகும். இதில்,

00–03 வரையான புள்ளிப்பரம்பலில் 37% ஆனோரும்

04-07 வரையான புள்ளிப்பரம்பலில் 24% ஆனோரும்


08-11 வரையான புள்ளிப்பரம்பலில் 25% ஆனோரும்

12–15 வரையான புள்ளிப்பரம்பலில் 14% ஆனோரும் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ்வினாவிற்கு 07 இற்குக்கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் 39% ஆக இருக்கும் அதேவேளை 61% ஆனோர் 7 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**மூலம் : RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

**வரைபு 4.11**

4 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிகள்




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

4 ஆம் வினா கட்டாய வினாவாகும். இதனுள் இரு தெரிவு வினாக்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றினைத் தெரிவுசெய்து மாணவர்கள் விடையளிக்க வேண்டும். 1வது பகுதி ‘இலட்சியமும் சமநோக்கும்’ என்ற கட்டுரையை அடிப்படையாகக்கொண்ட பகுதியாகும். இலட்சியமும் சமநோக்கும் என்பதற்கான விளக்கம் மற்றும் மணிவாசகர், தருமர், தசரதன் ஆகியோர் தத்தம் இலட்சியத்தில் கொண்ட உறுதிப்பாடு என்பன தொடர்பான வினாக்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வினாவின் (அ) பகுதி கடினத்தன்மை கூடியதாக உள்ளது. இதன் இலகுதன்மை 30% ஆக உள்ளது. இலட்சியமும் சமநோக்கும் என்பதற்கான விளக்கத்தை எழுதுவதில் பரீட்சார்த்திகள் இடர்ப்பட்டுள்ளனர். இவ்வினாவின் (ஆ) பகுதி இலகுதன்மையுடையதாக உள்ளது. இதன் இலகுதன்மை 49% ஆகும். மணிவாசகர், தருமர், தசரதன் ஆகியோரின் இலட்சியம்பற்றிய உறுதிப்பாட்டினைப் பரீட்சார்த்திகள் தெளிவாக விளங்கி எழுதியுள்ளனர்.

4 ஆம் வினாவின் 2 ஆம் பகுதி கம்பியூட்டர் சிறுகதையை அடிப்படையாகக் கொண்டதாகும். கதையோட்டத்தில் அரவிந்தன் பாத்திரம் பெறும் முக்கியத்துவம், ஆசிரியரின் நகைச்சுவையுணர்வு என்பன தொடர்பாக வினாக்கள் இடம்பெற்றுள்ளன. இவ்விரு வினாக்களினதும் இலகுதன்மைகள் முறையே 43%, 41% ஆக அமைந்துள்ளன.

இப்பகுதிகளின் அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்குக் கட்டுரை, சிறுகதைப் பகுதிகளை மீண்டும் மீண்டும் வாசிக்க வழிப்படுத்துவதுடன், முக்கியமான விடயங்கள் தொடர்பான குறிப்புகளை எழுதி வைத்திருக்கவும் வழிப்படுத்தல் வேண்டும். பாத்திரங்களின் பண்புகளை எடுத்துக் காட்டுகளுடன் எழுதுவதற்கும் கதையை எழுதாமல் வினாக்களுக்கு ஏற்ற வகையில் விடையளிப்பதற்கும் பயிற்சியளித்தல் வேண்டும்.

### 4.3.9 வினா இலக்கம் 5 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

- **5, 6, 7** ஆகிய வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவுசெய்து விடை எழுதுக.

**5.** 'தண்டாமரையினுடன் பிறந்தும்...' எனத் தொடங்கும் **விவேக சிந்தாமணிப்** பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) புல்லர், நல்லோர் ஆகியோருக்கிடையிலான வேறுபாடு

(ஆ) அந்த வேறுபாட்டை உணர்த்துவதற்கு கவிஞர் கையாண்ட உவமையின் பொருத்தப்பாடு

(10 புள்ளிகள்)

அ)

- அறிவில்லாதவர்கள், நல்லவர்களை நன்கு அறிந்திருந்தாலும் அவர்களோடு பழகிப் பயன்பெற மாட்டார்கள்.
- அறிவுள்ளவர்கள், நல்லவர்களைக் கண்டவுடனேயே அவர்களது நற்குணங்களைத் தெரிந்துகொண்டு அவர்களை நாடி வந்து உறவாடி மகிழ்வர்.

**(5 புள்ளிகள்)**

ஆ)

- புல்லர் குளத்தில் வாழும் தவளைகள் போன்றவர்கள். தவளை தாமரைக் குளத்தில் வாழ்ந்தாலும் அதற்குத் தாமரையின் சிறப்புத் தெரியாது.
- நல்லோர், காட்டிலிருந்து வந்து தாமரையின் தேன் உண்ணும் வண்டு போன்றவர்கள். அவர்கள் வண்டு தூர இருப்பினும் தாமரையின் தேனைத் தேடி வந்து உண்பது போல நல்லோரைத் / கற்றோரைத் தேடியறிந்து உறவாடி மகிழ்வர்.


**(5 புள்ளிகள்)**

**(5 + 5 = 10 புள்ளிகள்)**

### 4.3.10 வினா இலக்கம் 5 இற்கான பகுப்பாய்வு

**வரைபு 4.12**

வினா இல. 5 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்




5 வது வினா தெரிவு வினாவாகும். இவ்வினாவுக்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும். இதில்,

00–02 வரையான புள்ளிப்பரம்பலில் 25% ஆனோரும்

03-05 வரையான புள்ளிப்பரம்பலில் 21% ஆனோரும்

06-07 வரையான புள்ளிப்பரம்பலில் 19% ஆனோரும்


08–10 வரையான புள்ளிப்பரம்பல் 35% ஆனோரும்

புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ்வினாவிற்கு 54% ஆனோரே அரைவாசிக்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்கும் அதேவேளை 46% ஆனோர் அரைவா-சிக்கும் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

**மூலம் : RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

**வரைபு 4.13**

5 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிகள்




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

விவேகசிந்தாமணிப் பாடலில் புல்லர், நல்லோர் ஆகியோருக்கிடையிலான வேறுபாடு, அந்த வேறுபாட்டை உணர்த்துவதற்குக் கவிஞர் கையாண்ட உவமையின் பொருத்தப்பாடு என்பன தொடர்பான வினாக்கள் அமைந்துள்ளன. இதன் இரு பிரிவு வினாக்களினதும் இலகுதன்மைகள் முறையே 66%, 59% ஆகும். உவமையின் பொருத்தப்பாட்டை விளக்கும் (ஆ) பிரிவு வினாவுக்கு உவமையினையே பரீட்சார்த்திகள் எழுதியுள்ளனர். எனவே அணிகளின் பொருத்தப்பாட்டை விளக்குவதற்கு பயிற்சியளிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

### 4.3.11 வினா இலக்கம் 6 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

**6.** தமிழ்ப் பண்பாடு என்ற கட்டுரையில்

(அ) பழந்தமிழ்ப் புலவர்கள்

(ஆ) பிற்கால அறிஞர்கள்

ஆகியோரிடத்து கண்ணோட்டம் எனும் மனப்பான்மை காணப்பட்டமை எடுத்துரைக்கப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

அ)

- தமிழ்நாட்டிற்கு அப்பால் இருந்து வந்த சமயங்கள் எல்லாம் தமிழ்நாட்டிற்குள் வந்து தமது சமய தத்துவங்களைப் போதித்தபோதும் அவற்றிலிருந்து கருத்துகளைத் தழுவிக் கொண்டு பொது நிலையில் இலக்கியம் செய்தமை
- பழந்தமிழ்ப் புலவராகிய இளங்கோ சமணராக இருந்தபோதும் தமிழர் தழுவிய பழக்கவழக்கங்களையும் வழிபாட்டு முறைகளையும் சிலப்பதிகாரத்தில் கூறியுள்ளமை
- சமணம், பௌத்தம் வெறுத்து ஒதுக்கிய இசை, நடனத்துறைகளை இளங்கோவடிகளும் திருத்தக்கதேவரும் நன்று என விபரித்தமை
- வள்ளுவர் சமணர் எனக் கருதப்பட்டாலும் காமத்துப்பாலையும் இல்லறத்தையும் போற்றி எழுதியமை
- சைவராகிய நச்சினார்க்கினியர் சமண நூலாகிய சீவகசிந்தாமணிக்கும் சமணராகிய இளம்பூரணர் அகத்திணையியலுக்கும் உரை எழுதியமை

**(5 புள்ளிகள்)**

ஆ)


- பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளை முதலானோர் பிற சமய இலக்கியங்களைப் பாராட்டி எழுதியமை
- திரு வி.கல்யாணசுந்தர முதலியார், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை முதலானோர் பிற மத தெய்வங்களையும் அடியார்களையும் போற்றி இலக்கியம் படைத்தமை
- சமய சமரச கீர்த்தனைகள் இயற்றப்பட்டமை
- பிற்காலத்தில் பல நாடுகளிலிருந்து வந்த சமய குரவர்கள் தமிழ்ப் பண்பாட்டின்படி கண்ணோட்டத்துடன் இலக்கியங்களை யாத்தமை (போப்பையர், வீரமாமுனிவர், கால்டுவெல் ஐயர்) **(5 புள்ளிகள்)**

**(5 + 5 = 10 புள்ளிகள்)**

### 4.3.12 வினா இலக்கம் 6 இற்கான பகுப்பாய்வு

**வரைபு 4.14**

வினா இல. 6 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்




6 வது வினா தெரிவு வினாவாகும். இவ்வினாவுக்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும். இவ்வினா மிகவும் கடினத்தன்மையுடைய வினாவாகும். இதில்,

00–02 வரையான புள்ளிப்பரம்பலில் 76% ஆனோரும்

03-05 வரையான புள்ளிப்பரம்பலில் 12% ஆனோரும்

06-07 வரையான புள்ளிப்பரம்பலில் 7% ஆனோரும்


08–10 வரையான புள்ளிப்பரம்பல் 5 % ஆனோரும்

புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ்வினாவிற்கு 24% ஆனோரே 2 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்கும் அதேவேளை 76% ஆனோர் 2 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

**மூலம் : RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

**வரைபு 4.15**

6 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிகள்




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

‘தமிழ்ப்பண்பாடு’ என்ற கட்டுரையில் பழந்தமிழ்ப் புலவர்கள்,பிற்கால அறிஞர்கள் ஆகியோரிடத்து கண்ணோட்டம் என்ற மனப்பான்மை காணப்பட்டமை தொடர்பான வினாக்கள் அமைந்துள்ளன. இவ்வினாவின் 1 ஆம் உப பிரிவின் இலகுதன்மை 9% ஆகவும் 2 ஆம் பிரிவின் இலகுதன்மை 6% ஆகவும் காணப்படுகின்றது.

பழந்தமிழ்ப் புலவர்கள், பிற்கால அறிஞர்கள் ஆகியோரின் பெயர்களை சுட்டிப்பாக எழுத மாணவர்கள் இடர்ப்பட்டுள்ளனர். அது மட்டுமன்றி கண்ணோட்டம் என்ற மனப்பாங்கு தொடர்பாகவும் மாணவரிடத்தில் போதிய தெளிவு காணப்படவில்லை. வினாவுக்கு ஏற்ற வகையில் விடையை மாற்றி எழுதுவதிலும் மாணவர்கள் இடர்பட்டுள்ளனர்.

### 4.3.13 வினா இலக்கம் 7 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

7. சீறி ஓடாத வருங்கால மனித நதி... என்ற கவிதையில்

(அ) எழுத்தறிவின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுமாறு

(ஆ) அதனை வலியுறுத்துவதற்கு ஆசிரியர் கையாண்ட உத்தி

ஆகியன பற்றி விளக்குக.

(10 புள்ளிகள்)

அ)

- எழுத்தறிவற்றவன் பரிதாபத்தின் மொத்த வடிவம்
- மிக அடிப்படைத் தேவையான கையொப்பத்தையே இட முடியாத நிலை
- ஆளுமைக் குறைவு (வெட்கிச் சிரித்தல், செத்த சிரிப்பு)
- தன் அடிப்படை உணர்வுகளைக்கூட எழுத்தில் வடிக்க முடியாமை
- சாதிக்கக்கூடிய எதனையும் சாதிக்க முடியாத நிலையில் ஒதுங்கிக் கிடக்க வேண்டிய அவலம்

**(5 புள்ளிகள்)**

ஆ)

- கையெழுத்து இடத் தெரியாத ஒருவனின் பரிதாப நிலையை நேரில் கண்ட அரச அலுவலர் ஒருவரின் அனுபவ வெளிப்பாடாக விபரித்தல்
- இளமை, அழகு முதலியன இருந்தும் கல்வி இல்லாவிடில் வாழ்வில்லை என்பதனை இளைஞனை வருணித்திருப்பதன் மூலம் வெளிப்படுத்தியிருத்தல்
- மனிதனை வேகம் மிக்க நதியாக உருவகித்துவிட்டு, கல்வி இல்லாவிடின் அந்நதி உறைந்துவிடும் என்பதன்மூலம் கல்வியின் பெருமையை உணர்த்துதல்
- கவித்துவமான வரிகள் மூலம் கல்வியின் பெருமையையும் கல்லாமையின் இழிவையும் வெளிப்படுத்துதல் (செத்த சிரிப்பு, இதயம் கழன்று கருகிப் பற்றியது)
- எழுத்தறிவற்ற ஒருவனின் நிலையை எழுத்தறிவில்லாத முழுச் சமுதாயத்திற்கும் உரியதாக வெளிப்படுத்துதல்


**(5 புள்ளிகள்)**

**(5 + 5 = 10 புள்ளிகள்)**

### 4.3.14 வினா இலக்கம் 7 இற்கான பகுப்பாய்வு

**வரைபு 4.16**

வினா இல. 7 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்




7 வது வினா தெரிவு வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும். இவ்வினா மிகவும் கடினத்தன்மையுடைய வினாவாகும்.

00–02 வரையான புள்ளிப்பரம்பலில் 38% ஆனோரும்

03-05 வரையான புள்ளிப்பரம்பலில் 34% ஆனோரும்

06-07 வரையான புள்ளிப்பரம்பலில் 19% ஆனோரும்


08–10 வரையான புள்ளிப்பரம்பலில 9% ஆனோரும்

புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ்வினாவிற்கு 28% ஆனோரே 5 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்கும் அதேவேளை 72% ஆனோர் 5 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

**மூலம் : RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

**வரைபு 4.17**

7 ஆம் வினாவின் உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச்சுட்டிகள்




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2022 இ.ப.தி

இவ்வினா ‘சீறி ஓடாத வருங்கால மனித நதி’ என்ற கவிதையை அடிப்படையாகக் கொண்டது. எழுத்தறிவின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படும் வகை, அதனை வலியுறுத்துவதற்கு ஆசிரியர் கையாண்ட உத்தி என்பன தொடர்பான வினாக்கள் வினவப்பட்டுள்ளன. வினாவின் (அ) பிரிவின் இலகுதன்மை 37% ஆகவும் (ஆ) பிரிவின் இலகுதன்மை 27% ஆகவும் காணப்படுகின்றன. வினாக்களுக்கான விடைகளைப் பரீட்சார்த்திகள் கதை வடிவில் எழுதுவது பொதுவாக அவதானிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் கையாண்ட உத்திகளும் பொருத்தமான உதாரணங்களுடன் போதியளவு எழுதப்படவில்லை.

வினாவுக்கு ஏற்றவகையில் விடைகளை எழுதுவதற்கும் ஆசிரியர் பயன்படுத்திய உத்திகள் அனைத்தையும் எடுத்துக்காட்டுகளுடன் எழுதுவதற்கும் மாணவர்களுக்குப் போதியளவு பயிற்சியளித்தல் வேண்டும்.